விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலவயனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2369)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 03 திங்கட்கிழமை (19.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212

## டெல்டா திரிபு வைரஸ் காற்றின் மூலமாக பரவும்

### அமைச்சர் ஜயசுமன எச்சரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸின் டெல்டா திரிபு எதிர்காலத்தில் காற்றின் ஊடாக பரவக்கூடிய அபாயம் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.
அனுராதபுரத்தில் 19

## 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி

### அரசு பரிசீலணை



(கொழும்பு)
12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கோவிட் - 19 தடுப்பூசி செலுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.
உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்தார்.
ஊடகங்களிடம் 19

## டெல்டாவினால் அடுத்த சில நாட்களில்

# நாடு மோசமான அழிவைச் சந்திக்கும்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



*(கொழும்பு)*
டெல்டா வகை திரிபு வைரஸ் அடுத்த சில நாட்களில் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறும். இதனால் நாடு மிகவும் மோசமான அழிவைச் சந்திக்கும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.
*(19ஆம் பக்கம் பார்க்க)*

## யாழில் நேற்றும் கோவிட்டால் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 19

## கொரோனா 46 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் நேற்று முன்தினம் கொரோனாத் தொற்றால் மேலும் 46 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள் 19

## கொரோனா +1,402

(கொழும்பு)
நாட்டில் மேலும் 1.402 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத் 19

## வவு.பெரியநொச்சிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

(வவுனியா)
வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய நொச்சிக்குளம் குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 19

## நல்லூரில் வீடு உடைத்து பெருமளவு நகை கொள்ளை

### நாவற்குழியைச் சேர்ந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்.நல்லூர் ஆலயத்திற்கு அருகில் ஆசிரியர் ஒருவரின் வீட்டை உடைத்து உட்புகுந்து 20 லட்சம் பெறுமதியான நகைகளை திருடியவர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு 19

## கௌதாரிமுனை கடலில் மூழ்கி இளைஞன் மரணம்

### யாழிலிருந்து சுற்றுலா சென்றபோது துயரம்

(தருமபுரம்)
கிளிநொச்சி கௌதாரிமுனை கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணத்திலிருந்து நண்பர்களோடு சேர்ந்து கௌதாரி முனைக்கு சுற்றுலா சென்று கடலில் குளித்த 19

## அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறுமா? ஜனாதிபதியை சந்தித்த பின்பே தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் தயாசிறி அறிவிப்பு



(கொழும்பு)
"ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டு அரசில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து எதிர்வரும் 21ஆம் திகதி தீர்மானிக்கப்படும்."
இவ்வாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 19

## விபரீத முடிவால் இளைஞன் உயிரிழப்பு

### குடத்தனையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி, 19

## உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இன்று விவாதம்

(கொழும்பு)
வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றைய தினம் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள் 19

## ஆசிரியர் சமூகத்தினரிடம் ஜனாதிபதி கோட்டாபய மன்னிப்புக் கோர வேண்டும்

### முஜிபுர் எம்.பி அழுத்தம்

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்து ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

தனியார் பேருந்து ஊழியர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குமாறு அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

கோவிட்-19 நிலைமை காரணமாக பல பேருந்து உரிமையாளர்கள் வருமான ஆதாரங்களை இழந்துள்ளனர் என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சனா பிரியான்ஜித் தெரிவித்தார்.

இந்த ஆண்டு சுமார் 60 ஆயிரம் பேருந்து ஊழியர்கள் அவ்வப்போது வேலை இழந்துள்ளனர். தற்போது 20 சதவீதமான பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன. எனவே சுமார் 40 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ஊழியர்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

எனவே ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு மாதந்தோறும் 15 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று அரசைக் கோருகின்றோம்" என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஞா)

# கொரோனாத் தடுப்பூசியேற்றல் குழுவிலிருந்து மூவர் இராஜினாமா

(கொழும்பு)

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கோவிட் - 19 தடுப்பூசியேற்றல் தொடர்பான நிபுணர் குழுவின் மூன்று உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவாக் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பின்னர் இவர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

8 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவிலிருந்து வைத்தியர் ரஜிவ டி சில்வா, வைத்தியர் காந்தி நாணயக்கார மற்றும் பேராசிரியர் சன்னரணசிங்க ஆகியோரே இவ்வாறு இராஜினாமா செய்துள்ளனர்.

சீனத் தயாரிப்பான சினோவாக் தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி வழங்குவதற்கு தாம் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அந்த தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதியளித்துள்ளமையே தாம் இராஜினாமா செய்வதற்கு காரணம் என இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோவிட் - 19 டெல்டா பிறழ்விற்கு மத்தியில், சினோவாக் தடுப்பூசி போதிய பலனளிக்காத தடுப்பூசி என கோவிட் -19 தடுப்பூசி தொடர்பான நிபுணர் குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


சினோவாக் தடுப்பூசி இரு தடவைகள் ஏற்றப்பட்டு 6 மாதங்களின் பின்னர் மூன்றாவது தடுப்பூசியும் ஏற்றப்பட வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் நான்கு குரங்குகளுக்கு கொரோனாத் தொற்று

தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் மேலும் நான்கு விலங்குகள் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரு ஒராங்குட்டான் குரங்குகள் மற்றும் இரு சிம்பன்சி குரங்குகளுக்கே இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## நினைவஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் பஞ்சகர்ம வைத்தியசாலை புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு மருத்துவ அதிகாரியுமான Dr. தயாழினி அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **சுப்பிரமணியன் ஜெகநாதன்**

அவர்களின் பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 24.03.1949 உதிர்வு 10.05.2021

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை

(7271)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட சித்த மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகரும் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய Dr. P. ஸ்ரீ கணேசன் அவர்களின் அன்புத் தாயார்

**பரமேஸ்வரி புண்ணியமூர்த்தி**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்குகெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 24.05.1936
உதிர்வு : 14.07.2021

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை

(7272)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## சாவு அறிவித்தல்



**திருமதி புவனேஸ்வரியம்மா சிங்காரவேலு (மணி)**

பிறந்தமை 29.03.1944 இறந்தமை 18.07.2021

வடமராட்சி பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவில் கரைச்சிக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் வாழ்ந்தவரும் தற்போது சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரியம்மா சிங்காரவேலு நேற்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - கண்மணியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிங்காரவேலுவின் (உதவி அரசாங்க அதிபர் - செட்டிகுளம், கரைதுறைப்பற்று மற்றும் தலைமைச் செயலக உதவி அரசாங்க அதிபர் - முல்லைத்தீவு) அன்பு மனைவியும் Dr. குமரவேள் (மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம்), தாரணி (இங்கிலாந்து), காலஞ்சென்ற முருகவேள் (பேரெழிலன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலராசா (இங்கிலாந்து), துஷ்யந்தி (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனிகை (இங்கிலாந்து), காலஞ்சென்ற எழுபரிதி மற்றும் பிரிதிகை (இங்கிலாந்து), எழினி, வேளினி, வேணிலா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரியம்மா, நவரட்ணசாமி, இராஜலக்சுமியம்மா மற்றும் செல்வமாணிக்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற அம்பிகையம்மா மற்றும் கண்டுமணி (இங்கிலாந்து), காலஞ்சென்ற பரமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - இரத்தினம் தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.07.2021) செவ்வாய்க் கிழமை மதியம் 12.00 மணியளவில் 30/2, விதானையார் வீதி, சுண்டிக்குளியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(C-2379)

தகவல்:- Dr. குமரவேள் (மகன்) +94 77650 8517
தாரணி (மகள்) +44 753 964 6919

## மரண அறிவித்தல்



**மார்க்கண்டு சுப்பிரமணியம்**
(மணியம்)
(கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஓய்வுநிலை பரிசாரகர்)

மண்ணில் : 1950.01.20
விண்ணில் : 2021.07.18

யாழ். பலாலியைப் பிறப்பிடமாகவும் இல. 315, 5ஆம் யுனிற், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சுப்பிரமணியம் (மணியம்) நேற்று (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவசோதியின் அன்புக் கணவரும் சுதர்சன், சபேசன், ஜீவா, காலஞ்சென்ற கவிதா, நிறோஜன் (People Leasing) ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்சினி, விவேகானந்தன் (சாரதி - CTB), டயந்தினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் சின்னத்துரை, தவமணி, காலஞ்சென்ற சின்னத்தங்கம் மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி, நடேசன், கணேசன், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜானன், சுவஸ்ரிகா, சயானி, சஸ்பித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2381)

இல. 315, 5ஆம் யுனிற்,
இராமநாதபுரம்.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் டெல்டா திரிபு அதிகளவில் பரவும் அபாயம்

## எச்சரிக்கிறார் பேராசிரியர் சன்ன ஜெயசுமன



(கொழும்பு)

**கொரோனா வைரஸின் "டெல்டா" திரிபு எதிர்காலத்தில் நாட்டில் அதிக அளவில் பரவக் கூடிய அபாயம் உள்ளதாகவும் காற்றினால் பரவக் கூடிய சாத்தியம் உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.**

பல்வேறு கொரோனா வகைகள் தற்போது உலகின் பல நாடுகளில் பரவி வருவதாகவும் அந்த வகையில் இலங்கையிலும் டெல்டா வகை பரவும் அபாயம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அநுராதபுரத்தில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர், "டெல்டா" வகை உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்துகிறது. இலங்கையால் மட்டும் அதிலிருந்து விடுபட முடியும் என நினைக்கவில்லை.

எனவே, எதிர்காலத்தில் டெல்டா நம் நாட்டில் அதிகம் காணப்படும் என்பதை மறுக்க முடியாது. இருப்பினும், ஸ்புட்னிக் தடுப்பூசி டெல்டா வகைகளுக்கு எதிராக செயற்படும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எமது நாட்டில் தற்போது சினோபார்ம், அஸ்ரா ஜெனேகா, மொடர்னா மற்றும் பைசர் போன்றவை மக்களுக்கு செலுத்தப்படுகின்றன. அந்த வகையில் தடுப்பூசி பெறுபவர்களுக்கு தொற்று ஏற்பட்டாலும் கூட, டெல்டா விகாரத்தால் பாதிக்கப்படுவது குறைவு. எனவே, தடுப்பூசி மிகவும் முக்கியமானது என தெரிவித்தார். (4-5)

# அரச காணி அபகரிப்புக்கு எதிராக புன்னாலைக்கட்டுவன் மக்கள் ஆர்ப்பாட்டம்



(குப்பிழான்)

அரச காணி அபகரிப்புக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக் கிழமை புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அச்செழு குளத்தடிப் பகுதியில் உள்ள புன்னாலைக் கட்டுவன் தெற்கு மத்தாளோடைப் பகுதி மக்களுக்குச் சொந்தமான சுமார் 210 பரப்புக் காணி அபகரிக்கப்பட்டு வெளிநபர் ஒருவருக்கு வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனிநபர் ஒருவரால் விற்கப்பட்டுள்ளது. குறித்த காணியை மீளவும் மீட்டுத் தருமாறு வலியுறுத்தியே குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புன்னாலைக் கட்டுவன் தெற்கு மத்தாளோடை கருமாரி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் அபகரிக்கப்பட்ட காணி வரை பேரணியாகச் சென்றடைந்து அங்கும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "அபகரிக்காதே... அபகரிக்காதே... மக்கள் காணியை அபகரிக்காதே!", "அரச காணியை அபகரிக்காதே விட்டுச் செல்", "போராடுவோம்... போராடுவோம்... காணியை மீட்கும்வரை போராடுவோம்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியும், பல சுலோகங்களைத் தமது கைகளில் தாங்கியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(4-5-18)

# ஆசிரியர் சமூகத்தினரிடம் ஜனாதிபதி மன்னிப்பு கோர வேண்டும்

## முஜிபுர் அழுத்தம்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலின் பின்னரான காலப்பகுதியில் சுயவிருப்பின் பேரில் இணையவழிக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்த ஆசிரியர்களை "மிகவும் மோசமானவர்கள்" என்று வர்ணித்த அமைச்சரும் ஜனாதிபதியும் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்திடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் வெளியிடப்படும் இத்தகைய கருத்துக்களின் மூலம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்திருக்கும் "ஒழுக்கமான நாட்டின்" தரம் எத்தகையதாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தற்போதைய அரசாங்கத்தின் கடந்த ஒன்றரை வருட ஆட்சிக்காலத்தில் நாட்டின் அனைத்துத்துறைகளும் பாரிய வீழ்ச்சிக்கு முகம் கொடுத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இப்போது நாடு அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றது.

கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது என மேலும் தெரிவித்தார். (4-5)

# சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தவே கடுமையான தனிமைப்படுத்தல் சட்டம்

## அரசியல் இலாபம் தேடுவதை எதிர்க்கட்சி நிறுத்தவேண்டும் என்கிறார் ரோஹித



(கொழும்பு)

நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அரசாங்கம் கடுமையான முறையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை செயற்படுத்துகிறது என துறைமுக அபிவிருத்தி மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

சிவில் அமைப்பினரும், தொழிற்சங்கத்தினரும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கும் போராட்டம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு நாட்டு மக்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் இலாபம் தேடிக் கொள்வதை எதிர்த்தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (4-5)

# மேலும் அரசியல் கைதிகள் சிலர் விடுதலை?

(கொழும்பு)

கடந்த மாதம் பொசன் போயா தினத்தினை முன்னிட்டு தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் உள்ளிட்ட சிறு குற்றங்களைப் புரிந்த 93 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், மற்றுமொரு தொகுதி அரசியல் கைதிகளின் விடுதலையினை அரசு உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரன் 'வேட்டைக்காரன்' தவான்

## இலங்கையை இலகுவாக வீழ்த்தியது இந்தியா



இலங்கைக்கு எதிரான முதல்ஒரு நாள் போட்டியில் இஷான் கிஷான், அணித் தலைவர் ஷிகர் தவான் அரைசதம் விளாச இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை வந்துள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி கொழும்பில் நடந்தது. இந்திய அணியில் இஷான் கிஷான், சூர்யகுமார் யாதவ் அறிமுகமாகினர். நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இலங்கை அணிக்கு அவிஷ்கா பெர்ணான்டோ (32), மினோத் பானுகா (27) நல்ல ஆரும்பம் கொடுத்தனர். பானுகா ராஜபக்ஷ (24), சரித் அசலங்க (38), அணித் தலைவர் தசுன் ஷனகா (39) ஓரளவு கைகொடுத்தனர். தனஞ் செய டி சில்வா (14), வனிந்து ஹசரங்க (8) ஏமாற்றினர். கடைசி நேரத்தில் சமிகா கருணாரத்னே (43*) கைகொடுக்க இலங்கை அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குல்தீப் யாதவ், யுவேந்திர சகால், தீபக் சகார் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு பிரித்வி ஷா (43) நல்ல ஆரம்பம் கொடுத்தார். அபாரமாக ஆடிய அறிமுக வீரர் இஷான் கிஷான் (59) அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் அசத்திய அணித் தலைவர் ஷிகர் தவான் தன்பங்கிற்கு அரைச்சதமடித்தார். மணிஷ் பாண்டே (26) ஒத்துழைப்பு நல்கினார். மற்றொரு அறிமுக வீரர் சூர்யகுமார் யாதவ் நம்பிக்கை அளித்தார்.

இந்திய அணி 36.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தவான் (86), சூர்யகுமார் யாதவ் (31) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

தவானின் அதிரடிகளில் ஒன்று

### தவான் 6 ஆயிரம் ஓட்டங்கள்

சர்வதேச ஒருநாள் போட்டியில் 6 ஆயிரம் ஓட்டங்களை குறைந்த இன்னிங்ஸில் எட்டிய இந்திய வீரர்கள் பட்டியலில் முன்னாள் அணித் தலைவர் கங்குலியை முந்தினார் தவான்.

ஷிகர் தவான், தனது 23 ஆவது ஓட்டத்தை எட்டிய போது, ஒருநாள் போட்டியில் 6 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை அடைந்தார். இவர், 140 இன்னிங்சில் இந்த இலக்கை அடைந்தார். இதன்மூலம் ஒரு நாள் போட்டி அரங்கில் குறைந்த இன்னிங்சில் 6 ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்கள் பட்டியலில் முன்னாள் அணித் தலைவர் கங்குலியை (147 இன்னிங்ஸ்) முந்தி 2ஆவது இடம் பிடித்தார். முதலிடத்தில் வழமையான அணித் தலைவர் விராட் ஹோலி (136 இன்னிங்ஸ்) உள்ளார்.

* தவிர, ஒருநாள் போட்டியில் 6 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய 10ஆவது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார் தவான். ஏற்கெனவே சச்சின் (18426 ஓட்.), ஹோலி (12169), கங்குலி (11363), டிராவிட் (10889), தோனி (10773), அசார் (9378), ரோகித் (9205), யுவராஜ் (8701), சேவக் (8273) இம்மைல்கல்லை எட்டியிருந்தனர்.

**தோனி வழியில்...**

அபாரமாக ஆடிய ஷிகர் தவான் அரைச்சதம் கடந்தார். இதன்மூலம் அணித் தலைவராக அறிமுகமான ஒருநாள் போட்டியில் 50 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் அஜித் வடேகர், ரவி சாஸ்திரி, சச்சின், அஜய் ஜடேஜா, தோனி ஆகியோருடன் இணைந்தார்.

## கிண்ணம் வென்றது மே.தீவுகள்

### ஆஸி மீண்டும் தோல்வி



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5ஆவது 'ரி20' போட்டியில் 16 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி, தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணத்தை சுவீகரித்தது.

மே.தீவுகள் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்றது.

முதல் நான்கு போட்டிகளின் முடிவில் மே.தீவுகள் அணி 3-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் 5ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி செயின்ட் லூசியாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணிக்கு எவின் லீவிஸ் 34 பந்துகளில், 9 சிக்சர், 4 பவுண்டரி உட்பட 79, கிறிஸ் கெய்ல் (21), சிம்மன்ஸ் (21), அணித் தலைவர் நிக்கோலஸ்பூரன் (31) ஓரளவு கைகொடுக்க.

மே.தீவுகள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை 199 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அன்ட்ரூ டை 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு ஜோஷ் பிலிப் (0) ஏமாற்றினார். அணித் தலைவர் ஆரோன் பின்ச் (34), மிட்சல் மார்ஷ் (30), ஹென்ரிக்ஸ் (21), மத்யூ வேட் (26) ஆறுதல் கொடுத்தனர். கடைசி ஓவரில் வெற்றிக்கு 32 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஹைடன் வோல்ஷ் வீசிய 20ஆவது ஓவரில் 15 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது.

அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைமட்டும்எடுத்துதோல்வியடைந்தது.

பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் ஷெல்டன் காட்ரெல், ஆன்ட்ரே ரசல் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகன் விருதை எவின் லீவிஸ், தொடர் நாயகன் விருதை ஹைடன் வோல்ஷ் வென்றனர்.

## பட்டையைக் கிளப்பினார் பட்லர்

### பழிதீர்த்தது இங்கிலாந்து



அரைச்சதம் விளாசிய பட்லர்

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது 'ரி20' போட்டியில் அசத்திய இங்கிலாந்து அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

இங்கிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி லீட்சில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் (10), டேவிட் மலான் (1) ஏமாற்றினர். அபாரமாக ஆடிய அணித் தலைவர் ஜோஸ் பட்லர் 39 பந்துகளில் 59 ஓட்டங்கள் (2 சிக்சர், 7 பவுண்டரி) எடுத்தார். மொயீன் அலி (36), லியாம் லிவிங்ஸ்டன் (38) ஓரளவு கைகொடுத்தனர்.

இங்கிலாந்து அணி 19.5 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் ஹஸ்னைன் 3 விக்கெட் வீழ்த்தினார்.

கடின இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு மொஹமட் ரிஸ்வான் (37), அணித் தலைவர் பாபர் ஆசம் (22) நல்ல ஆரம்பம் கொடுத்தனர். மொஹமட் ஹபீஸ் (10), பகார் ஜமான் (8), ஆசம் கான் (1) ஏமாற்றினர். இமாத் வாசிம் (20), ஷதாப் கான் (36*) ஆறுதல் தந்தபோதும், பாகிஸ்தான் அணி 20 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி யடைந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் சகிப் மொஹமட் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகள் கொண்ட தொடர் 1:1 என, சமநிலையில் உள்ளது. மூன்றாவது போட்டி நாளை மன்செஸ்டரில் நடக்கவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கல்வியைப் போன்றே தொழிற்கல்விக்கும் முக்கியத்துவம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பாரம்பரிய கல்வியைப் போன்றே தொழிற்கல்விக்கும் அரசாங்கம் சமமான முக்கியத்துவத்தை வழங்கி வருவதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



பாரம்பரிய கல்வியை மேம்படுத்தும் அதேவேளை திறன் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கம் உயர்மட்ட கவனத்தை செலுத்தி வருவதாக தெரிவித்துள்ள கல்வியமைச்சர், பாரம்பரிய பல்கலைக்கழகங்களை மேம்படுத்தும் அதேவேளை தொழிற்கல்விக்கு முக்கியத்தும் கொடுத்து எதிர்காலத்தை எதிர்கொள்ளும் விடயத்தில் தற்போதைய அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தொழிற்கல்வியை இரண்டாம் பட்சமாக பார்க்காது அனைவரதும் எதிர்காலமாக கருதி கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

எமது நாட்டிலுள்ள முக்கிய நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் பயிற்சி பெற்ற ஆளணியினர் இல்லாமையே. அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இருப்பார்களானால் தற்போது நடைமுறையிலுள்ள செயற்றிட்டங்களை மூன்று மடங்காக அதிகரிக்க முடியும்.

அவ்வாறானவர்களை உருவாக்குவதற்கு திறன் அபிவிருத்தி அத்தியாவசியமானதாகும். அதற்காக கல்வியமைச்சோடு இணைந்ததாக இராஜாங்க அமைச்சை உருவாக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

அதற்கான இராஜாங்க அமைச்சர் தொழிற்கல்வி துறையில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றார்.

அதற்கிணங்க மிக குறுகிய காலத்தில் தொழிற்கல்வி துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்படுவதை நாம் பார்க்கலாம் என்றும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4-5)

# நிலவுக்கு செல்லும் இலங்கை யுவதி



(கொழும்பு)

டியர் மூன் என்ற திட்டத்தின் கீழ் நிலவுக்கு பயணம் செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ள இறுதியான முழு அணியில் இலங்கையை சேர்ந்த சந்தனி குமாரசிங்க என்ற யுவதி இடம் பெற்றுள்ளார்.

இந்த திட்டத்திற்காக 249 நாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஒரு மில்லியன் விண்ணப்பங்களில் 17 பேரின் விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களில் 8 பேருக்கு இந்த சிறப்பு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் இந்த குழுவினர் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு நிலவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு சந்தனி குமாரசிங்கவுக்கு அமெரிக்காவின் நாசா நிறுவனத்தில் விண்வெளி மற்றும் விண்வெளி வீரருக்கான பாடநெறியை கற்க புலமைப்பரிசில் கிடைத்தது. அந்த பாடநெறியை கற்பதற்கு தனக்குள்ள பொருளாதார சிரமங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து அவர், சந்தனிக்கு உதவிகளை வழங்கியுள்ளார். (4-5)

# நீர்வழங்கல் அமைச்சிலும் பல மாற்றங்கள்

(கொழும்பு)

சமகால அரசாங்கத்தில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படும் முதல் அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது நீர்வழங்கல் அமைச்சில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நீர்வழங்கல் அமைச்சராக வாசுதேவ நாணயக்கார செயற்படுகின்றார்.

இந்நிலையில், நீர்வழங்கல் அமைச்சராக முன்னர் செயற்பட்ட அமைச்சரிடம் இந்த அமைச்சு பதவியை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை

## சுதந்திரக்கட்சி திட்டவட்டம்

(கொழும்பு)

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவில்லை என்றாலும், எதிர்க்கட்சிக்கு ஆதரவாக ஒரு முடிவினை எடுக்கப்போவதில்லை என்று சுற்றுச் சூழல் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.


எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு அவரது முடிவு அல்ல, அது அமைச்சரவை எடுத்த முடிவு.

எனவே இந்த முடிவுக்கு அமைச்சர் கம்மன்பில மட்டும் பொறுப்பேற்க முடியாது. ஏனெனில் இது ஜனாதிபதி மற்றும் பிரதமர் முன்னிலையில் எடுக்கப்பட்டது என்றும் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை உதய கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை தொடர்பான தமது இறுதி நிலைப்பாட்டுக்காக தமிழத் தேசியக் கூட்டமைப்பு இன்று கொழும்பில் சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெறும் என்று கட்சி கூறியுள்ளது. (4-5)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 02.03.1934
இறப்பு: 13.07.2021

அமரர்.திரு. கந்தையா முத்துத்தம்பி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சாந்தாதேவி ஸ்ரீராதாகிருஷ்ணன்
அவர்களின் அன்புத் தந்தையார்
திரு. கந்தையா முத்துத்தம்பி
அவர்கள் சிவபதமடைந்த
செய்தியறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்.



# ஆத்மார்த்த அஞ்சலி

அமரர். சிவஸ்ரீ நடராசக்குருக்கள் கேதீஸ்வரக்குருக்கள் அவர்கள்
(எமது தேவஸ்தான மகோற்சவ குரு)

கல்லல்ல கடவுள் என்று பணிசெய்ய வந்தீரே!
கல்லுக்கு இரவு இரவாக பூஜைப் பணிகள் செய்தீரே!
கல்லும் உம்பணியை ஏற்று சதுர்த்தி நன்னாளிலே!
கல்லோடு கல்லாய் உம்மைக் கவர்ந்து கொண்டதே!

அமரரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் சர்வவல்லமை பொருந்திய சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் ஆறுதல் அளிப்பாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பறாளை விநாயகர் தேவஸ்தானம்
பறாளாய், சுழிபுரம்.

சோழியூரான் பிறைசூடிக்குரு
குடும்பம்.

(7255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிற்குள் இருந்த மேசையை தூக்கிச் சென்ற கும்பல்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் வீட்டிற்கு பழைய இரும்பு சேகரிக்கும் கும்பல் ஒன்று படி ரக வாகனத்தில் வந்து வீட்டில் இருந்த மரத்திலான சிற்பவேலை செய் யப்பட்ட மேசையொன்றினை திருடி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நீர்வேலி அரச கேசரி பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீட்டில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இதன் பெறுமதி 25 ஆயிரம் ரூபாய் என தெரிவிக்கப்படுகின்றது. தூக்கி ஓடுவதை அவதானித்த அயலவர் தடுக்க செல் லும் போது அவரை உதைத்து விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸிலும் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

(4-8-6-33)

# வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் பதவியிலிருந்து விலகல்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகரசபையின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக கோணலிங்கம் கருணானந்தராசா, தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் உள்ளிட்டோருக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார். வல்வெட்டித்துறை நகரசபை யின் தலைவர் பதவியிலிருந்து எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதியுடன் விலகுவதாக அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் நகர சபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சியை எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டோர் ஆரம்பித்த நிலையில் அவர்களுடன் இணைந்து செயற்படுவதால் தமிழ் அரசுக் கட்சி அவரை வல்வெட்டித்துறை நகர சபை யின் தலைவர் பதவியிலிருந்து நீக்க முயற்சித்தது. எனினும் அது பின்னர் கைவிடப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நகர சபைத் தலைவராகத் தொடர விரும்பாத காரணத்தினால் பதவி விலகுகின்றேன் என்று கோணலிங்கம் கருணானந்தராசா தெரிவித்தார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பிவைத்துள்ளார். (4-7-33)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான தொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண் டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை கண் ணகிபுரம் இராஜ ராயேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் கீர்த்தனைக் கிரியா பூஷணம் சிவஸ்ரீ கு.கிஸ்ணராசக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)

# தற்காலிக சந்தைகளால் நிரந்தர சந்தைகளுக்கு பாதிப்பு

(சாவகச்சேரி)

கொரோனா அபாய சூழ்நிலை காரணமாக சாவகச்சேரி-டச் வீதி உள்ளிட்ட சில இடங்களில் புதிதாக அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தைகளால் சாவகச்சேரி நகர சபைக்கு பாரிய வருமான இழப்பு ஏற்பட்டிருப்பதாக சபை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பாக நகரசபை உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச் சந்தை இயங்கி வரும் வேளையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இன்னோர் சந்தை இயங்கி வருகிறது. இதனால் சாவகச்சேரி நகரசபைக்கும் சந்தையை குத்தகை எடுத்தவருக்கும் பாரிய வருமான இழப்பு ஏற்படுகிறது. அத்துடன் நகர சபை எல்லைக்குள் கொரோனா அபாய காலகட்டத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட மரக்கறிக் கடைகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

இது தொடர்பாக கவனம் செலுத்தி சாவகச்சேரி பொதுச் சந்தையின் தனித்துவத்தைப் பேண வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (4-5-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2356

Search for people, places and things

### கைலாஷ்

ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் வேடிக்கை




உனக்குத் தெரியுமா? அம்மாவும் அப்பாவும் உன்னை மார்க்கெட்டிலே கருவேப்பிலைக் காறிகிட்ட இருந்து தான் வாங்கிட்டு வந்தார்களாம்.

### மாதுஷா

தம்பி உங்க வலது கைல இருக்குற இந்த மச்சத்தால உங்களுக்கு நல்ல மனைவி அமைவாங்க...



யோவ்! அது சூடு வைச்ச தழும்பு யா... அத வைச்சதே எம் பொண்டாட்டி தான்...

### ஜீவிதா


Good morning to all I speak about



ஐயையோ மறந்துடுச்சே...

### கோலமுகி

நம்ம ஊருல தடுப்பூசி எங்க போடுறாங்க மச்சி கையில தாண்டா மச்சான்...



நீ அகராதி படிச்சவன்னு தெரிஞ்சும் உன்கிட்ட கேட்டேன் பாரு.. என்ன சொல்லனும்...

### தருண்

In child hood


அம்மா இதோ பாத்தியா லைட் எரியுது!




பாத்தியாடி பார்வதி என் மவனை இவனுக்கு இருக்குற அறிவுக்கு பெரிய சைண்டிஸ்ஸா வர போறான்...

### ருக்சாயினி

பொதிகை TV பாக்குறதுக்காக இந்த பின்ல கேபிள் வயர பெரிய Electrician மாதிரி நாங்க மாட்ட அத எங்க Mommy daddy வேடிக்கை பாக்க ஒரே கூத்தா இருக்கும்






நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொடர்னா தடுப்பூசிகளை பகிர்ந்து கொள்வதில் பெருமிதம்

## அமெரிக்க இராஜாங்க செயலாளர்

(கொழும்பு)

உலகளாவிய கொவிட் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் 15 இலட்சம் மொடர்னா தடுப்பூசி அளவுகளை 'இலங்கை நண்பர்களுடன்' பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் கொள்வதாக அமெரிக்காவின் ராஜாங்க செயலாளர் என்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

தமது டுவீட் செய்தி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்களைக் காப்பாற்றவும், உலகப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், புதிய வகைகளின் அச்சுறுத்தலைத் தடுக்கவும் முடிந்தவரை பலருக்கு தடுப்பூசி செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்று அவர் டுவீட் செய்துள்ளார். (4-5)

# யானை தாக்கி இருவர் பலி!

(கொழும்பு)

கஹடகஸ்திஹிலிய - கொக்மடுவ பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகிய இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். குறித்த சம்பவத்தில் 57 மற்றும் 65 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

நேற்று முற்பகல் குறித்த கிராமத்தின் வயல் பகுதிக்குள் காட்டுயானை உட்புகுந்துள்ளது.

இதனையடுத்து பிரதேச வாசிகளுடன் இணைந்து காட்டு யானையை விரட்டுவதற்கு முயற்சித்த போதே, இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-5)

# அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதே எமது முதற்கட்ட செயற்பாடு

## நிதியமைச்சர் பசில்

(கொழும்பு)

**அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலையினை குறைப்பது எமது முதற்கட்ட செயற்பாடாக அமையும் என நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதற்கு அனைத்து தரப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.**



மூன்றுவேளையும் உணவு பெற்றுக் கொள்ள வசதியில்லாத மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பல்வேறு எதிர்பார்ப்பிற்கு மத்தியில் மக்கள் ஆட்சி அதிகாரத்தை கையளித்துள்ளார்கள்.

ஆகவே அரிசி உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலையினை குறைப்பதற்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (4-5)

# ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களுக்கு பதவிகள்?

(கொழும்பு)

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பதவிகள் கிடைக்காத பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கண்காணிப்பு உறுப்பினர் பதவிகளை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகவுள்ளன.

இவர்கள் அமைச்சுக்களின் கண்காணிப்பு உறுப்பினர்களாக நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிக்கும் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: -செவ் 1 சூரி10 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: மென்பொருள் பொறியிலாளர்<br>எதிர்பார்ப்பு:மணமகன் விவாகரத்து பெற்றவர்,வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ: **B/11944** | பிறப்பு: 1993 கிறிஸ்தவம்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:. அரச ஆசிரியர் (வெளிவாரிப்பட்டதாரி)<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ:**G/11995** |
| பிறப்பு:1982 இந்து நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: -செவ் 12 சூரி10இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:**Civil Engineer**<br>எதிர்பார்ப்பு:தகுந்தபடித்த பெண்<br>தொ.இ: **B/11945** | பிறப்பு:1992இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி.பா:-செவ் 6 சூரி8 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:**B.A**முதலாம் வருடம்<br>எதிர்பார்ப்பு:தனியார்,அரசஉத்தியோகம்<br>தொ.இ:**G/11998** |
| பிறப்பு:1983இந்து நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா:56செவ் 11 சூரி12 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு:அழகானபெண்<br>தொ.இ: **B/11948** | பிறப்பு:1980இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா:36செவ் 12 சூரி5 இல்<br>தகைமை/தொழில்: அரச வைத்தியசாலை சிற்றூழியர்<br>எதிர்பார்ப்பு:சுயதொழில் புரிபவர்<br>தொ.இ:**G/5448** |
| பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 44செவ் 10சூரி8இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:**B.Sc, IT Company**<br>எதிர்பார்ப்பு:அழகியபெண்<br>தொ.இ: **B/11949** | பிறப்பு: 1984இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா:**58 ¾**செவ் 8 சூரி4 இல்<br>தகைமை/தொழில்: **Dentist, UK**<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு பார்க்கலாம்<br>தொ.இ:**G/5463** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மீன்பிடிக்கச்சென்ற மூன்று பேர் மாயம்

(கற்பிட்டி)

புத்தளம் - கற்பிட்டி பகுதியிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை கற்பிட்டியிலிருந்து குறித்த படகில் சென்ற நிலையில் 10 நாட்களாக எவ்வித தொடர்புகளும் இன்றி தாங்கள் உள்ளதாகவும்அவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மீன்பிடித் தொழிலுக்காக கடலுக்கு சென்ற மீனவர்கள் மூவரும் இதுவரை கரைதிரும்பவில்லை என கற்பிட்டி பொலிஸ் நிலையத்திலும், கற்பிட்டி கடற்படை முகாமிலும் மூன்று மீனவர்களின் குடும்பத்தினர்களும் முறைப்பாடு செய்துள்ளதாக கூறினர்.

அத்துடன் கற்பிட்டி மீனவர்கள், பொது மக்கள் ஆகியோரின் உதவியில் காணாமல் போன மூன்று மீனவர்களையும் தேடி வருவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். (4-5)


# பணிநயந்து பாராட்டுகின்றோம்



திருமதி
**வசந்தி சிவராஜன்**

யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையில் ஆசிரிய பணிபுரிந்து 19.07.2021 இன்று பணி இளைப்பாறுகை பெற்றுச் செல்லும் **திருமதி வசந்தி சிவராஜன்** அவர்களை பணிநயந்து ஓய்வுக் காலம் சிறப்புற அமைய புனித சவேரியார் அருள்வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சற்கோட்டை,
பருத்தித்துறை.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் கழகத்தினர்,
யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை

(C-2372)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 இற்கும் மேற்பட்ட கடலட்டை பண்ணை அமைக்க அனுமதி

## தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உதவிப் பணிப்பாளர்

(அக்கராயன்)

**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நெறிப்படுத்தலில் சுமார் 300க்கும் அதிகமான கடலட்டைப்பண்ணைகள் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் நிருபராஜ் தெரிவித்தார்.**



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடலின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் தற்போது 250க்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட அவர்,

பெரும்பாலானவைக்கு முழு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவிட்டதாகவும், தழுவல் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஏனையவற்றுக்கும் முழு அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்று தெரிவித்த அவர், இதனால், கடலட்டைப் பண்ணை முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் கடற்றொழில் அமைச்சர் தழுவல் அனுமதிகளை வழங்கி துரிதமாக கடலட்டைப் பண்ணைச் செயற்பாடுகளை முன்னெடுக்க வழிசெய்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனால், பெருமளவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயர்வடைந்திருப்பதாகவும் கூறிய நிருபராஜ், குறிப்பாக கொவிட் நெருக்கடி காலத்தில் கடற்றொழில் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கடலட்டைப்பண்ணைகளே பல கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றியது என்றும் தெரிவித்தார். (7-8-350)

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் - நானாட்டன் பிரதேச சபை பிரிவில் உள்ள பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் வீதிகளில் மாடுகள் குடியிருப்பதாகவும் இதனால் பல விபத்துக்கள் ஏற்படுவதாகவும் நானாட்டான் பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


குறிப்பாக இரவு நேரங்களில் நானாட்டான் சுற்று வட்ட பகுதி மற்றும் பிரதான வீதிகளின் கட்டாக்காலி மாடுகள் நடமாடுவதால் அதிகளவு விபத்து ஏற்படும் சந்தர்ப்பம்



காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே விரைவில் வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கவனிப்பின்றி நடமாடும் மாடுகளின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நானாட்டன் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-8-285)

# மோட்டார் செல்கள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் 4 மோட்டார் செல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது இவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த செல்களை நீதிமன்றின் அனுமதியுடன் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (7-8-100-316)

# தனுஷ்கோடியில் மீன்பிடித்த இந்தியர்களை விரட்டியடித்த இலங்கைக் கடற்படையினர்

(மன்னார்)

நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்திய இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்ததால் பெருத்த நட்டத்துடன் மீனவர்கள் கரை திரும்பியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி அருகே மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது சுமார் 8ற்கும் மேற்பட்ட அதி நவீன ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர் மீன்வர்களை அப்பகுதியில் மீன்பிடிக்க விடாமல் விரட்டி அடித்துள்ளனர்.

மேலும் இரவு நேரங்களில் இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல்களில் பொருத்தப்பட்ட ராட்சத மின் விளக்குகளை ஒளிரவிட்டு மீனவர்களை அப்பகுதியிலிருந்து விரட்டியடித்ததுடன் கற்கள் மற்றும் போத்தல்களைக் கொண்டு மீனவர்களின் படகுகள் மீது வீசியுள்ளனர்.

மேலும் நேற்று அதிகாலை சுமார் 3 மணியளவில் தனுஷ்கோடி அருகே பாரம்பரிய இடத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோநதுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இலங்கை கடற்படை மீனவர்கள் வலைகளை அறுத்து கடலில் வீசியதுடன் கைது செய்வோம் என ஒலிபெருக்கி மூலம் எச்சரித்துள்ளனர். இதனால் படகு ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை . நட்டத்துடன் மீனவர்கள் கரை திரும்பினர்.இலங்கை கடற்படையின் அச்சுறுத்தல் மற்றும் விரட்டியடிப்பு சம்பவங்கள் அதிகரித்து வருவதால் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை விட்டு மாற்றுத் தொழில் தேடி செல்ல வேண்டிய அவலம் ஏற்படும் எனவும் இதேநிலை நீடித்தால் மீன்பிடித் தொழில் அழியும் அபாயம் ஏற்படும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். (7-8-285)

# வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன் குளம் கரும்புள்ளியான் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்கள் நடத்திய வாள் வெட்டு தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அதே இடத்தை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான செல்வராசா யாதவராசா என்பவரே படுகாயங்களுக்குள்ளான நிலையில் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைக்களை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-8-315-281)

# பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் வரவேண்டும்

## பூநகரி பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன்)

கிளிநொச்சி முழங்காவில் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிறுத்தப்படுவதில்லை என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் முழங்காவில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட போதிலும் கிளிநொச்சி நகரத்தில் இருந்து முழங்காவில் வருகின்ற பேருந்துகளே முழங்காவில் பேருந்து நிலையத்தில் தரித்து நிற்பதாகவும் ஆனால் ஏ-32 வீதியில் மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பயணிக்கின்ற பேருந்துகள் முழங்காவில் பேருந்து நிலையத்திற்குள் வருகை தருவதில்லை.

இதன் காரணமாக பெருமளவு நிதியில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையக் கட்டடம் முழுமையான பயன்பாடின்றி காணப்படுவதாகவும் ஏ-32 வீதியில் பயணிக்கின்ற பேருந்துகள் முழங்காவில் பேருந்து நிலையத்திற்குள் வருவதன் மூலம் பெரும் நன்மைகள் உருவாகும் எனவும் அதற்காகவே கட்டடம் அமைக்கப்பட்டது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-8-350)

# பாலங்களின் புனரமைப்புகளினால் நன்மைகள்

## துணுக்காய் பிரதேசசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம் கிராமங்களில் இரு பாலங்கள் புனரமைக்கப்படுவதால் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது என துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் விரகத்தி இராசரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, துணுக்காய் அம்பலப் பெருமாள்குளம் வீதியில் கோட்டைகட்டியகுளம் தாழ்பாலம் மேம்பாலமாக மாற்றுதல், அம்பலப் பெருமாள்குளத்தின் சேதமடைந்த பாலத்தினை புனரமைத்தல் தொடர்பாக கடந்த பல ஆண்டுகளாக கோட்டைகட்டியகுளம், அம்பலப் பெருமாள் குளம் மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது இரு பாலங்களும் புனரமைக்கப்படுவதன் காரணமாக இரு கிராமங்களின் மக்களின் போக்குவரத்து நன்மைகள் மட்டுமல்ல துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து கிளிநொச்சி அக்கராயன் வழியாக கிளிநொச்சி நகரம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு மக்கள் இலகுவாக போக்குவரத்து செய்யக்கூடிய நன்மை ஏற்பட்டுள்ளது எனவும் துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (7-8-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

19.07.2021
ஆடி 03, திங்கட்கிழமை
தசமி முன்னிரவு 7.50 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.55 மணிவரை
சுபநேரம் 12.01-1.31 மணிவரை
இராகுகாலம் 7.31-9.01 மணிவரை
சந்திராஷ்டமம்: ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** – விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** – அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வருமானம் பெருக புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கடகம்** – புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும்.

**சிம்மம்** – நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு.

**கன்னி** – தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** – குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், காரிய வெற்றிக்கு கடவுளை கழிபட வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்** – வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வெற்றி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**தனுசு** – பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்** – புதிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்** – நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியான முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**மீனம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

கௌரவம் நேர்மையான உழைப்பில் இருக்கிறது.

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க இராணுவ காவலரண் அமையுங்கள்

## பிரதேச மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை கோரக்கன்கட்டுப் பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் வகையில் இராணுவ காவலரண் ஒன்றை அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன்கட்டு, ஊரியான் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான மணல் அகழ்விற்கு கோரக்கன்கட்டு குடியிருப்பு பிரதான வீதி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் குறித்த வீதியின் ஊடாக டிப்பர் வாகனங்கள் தொடர்ச்சியாக பயணம் செய்து வருவதனால் குறித்த வீதி முழுமையாக சேதமடைந்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஒதிய நகர் கிராமத்துக்கான பிரதான வீதியும் சட்டவிரோத மணல் அகழ்வால் முழுமையாக சேதமடைந்து காணப்படுகிறது. எனவே சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இராணுவ காவலரண் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை கிராம மக்கள் முன்வைத்துள்ளனர்.

குறித்த வீதியூடாக சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் டிப்பர் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் அதிக வேகத்துடன் பயணிப்பதால் அபாய நிலை காணப்படுவதுடன் வீதியும் மிக வேகமாக சேதமடைந்து வருவதாகவும் பிரதேச மக்கள் சுட்டியமை குறிப்பிடத்தக்கது. (7-8-315)

# பயிர்ச்செய்கை காணிகளை பெற்றுத் தாருங்கள்

## சாந்தபுரம் மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு சாந்தபுரம் கிராம மக்களுக்கான பயிர்ச்செய்கை காணிகளை பெற்றுத் தருமாறு சாந்தபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் கிராமத்தில் 750 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த பிரதேசம் இரணைமடுக்குளத்தின் மேற் பகுதியில் அமைந்திருப்பதால் வரட்சிக் காலங்களில் தண்ணீருக்கான தட்டுப்பாடும் நிலவுகிறது.

எனவே தங்களுடைய கிராமத்துக்கு மேற் பகுதியில் அமைந்துள்ள கொக்கடம்பன் குளத்தினை புனரமைத்து அதன் கீழ் உள்ள வயல் காணிகளை தங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிஉள்ளன.

குறிப்பிட்ட 750 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு கூட சொந்தமான நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய சொந்தக் காணி எதுவுமில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8-315)

# போதைப்பொருளுடன் இருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் மற்றும் முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 18 கிராம் 200 மில்லி கிராமும் உடைமையில் வைத்திருந்த குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் நேற்றையதினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (7-8-316)

# மோட்டார் சைக்கிள் அடித்து உடைப்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்க ளால் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று அடித்து முற்று முழுதாக சேதமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7-8-316)

# கௌதாரிமுனைக்கு மீண்டும் ஆரம்பமான போக்குவரத்து சேவை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை மன்னித்தலை மற்றும் கல்முனை போன்ற பகுதிகளுக்கான பிரதான வீதியாக காணப்படும் கௌதாரிமுனை கல்முனை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன் மன்னிதலைப்பகுதியில் இயற்கையாகவே படியும் மணல் திட்டு ஒன்று 6 அடி உயரத்திற்கு மேலாக வீதியை மூடி மணல் படர்ந்து காணப்பட்டது.



இதனால் கடந்த ஆறு மாதங்களாக போக்குவரத்தில் பல்வேறு இடர்பாடுகள் காணப்பட்டதுடன் இப்பகுதிக்கான ஒரே ஒரு பேருந்து சேவையும் மன்னித்தலையுடன் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனை அகற்றி போக்குவரத்துக்கு ஏற்ற வழிவகைகளை செய்து தருமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தற்போது குறித்த மணல் திட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையிலே அகற்றப்பட்டுள்ளது. அதேநேரம் இப் பகுதிக்கு ஒரு பேருந்து சேவை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கடந்த 3 நாட்களாக மேலும் ஒரு பேருந்து சேவையும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தடுப்பூசி போடாமைக்கு பேஸ்புக் காரணமில்லை

(வோஷிங்டன்)

அமெரிக்க அரசு தடுப்பூசி இலக்கை எட்ட முடியாமல் இருப்பதற்கு தங்கள் மீது பழி சுமத்தக் கூடாது என்று பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த சில வாரங்களாக கொரோனாத் தொற்று அதிகரித்து வருகிறது. இதற்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களே காரணம் என்று அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு வாரியம் விமர்சித்திருந்தது.

மேலும் இம்மாதிரியான மக்களின் மன நிலைக்கு சமூக ஊடகங்களே காரணம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இதனை மறுத்து பேஸ்புக் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது,

“எங்களுடைய தரவுகளின்படி 85% பேஸ்புக் பயனாளர்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அல்லது தடுப்பூசி போட விரும்புகிறவர்கள் தான். எனவே மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போட முடியாமல் சென்றதற்கு பேஸ்புக் காரணமில்லை. எங்கள் மீது பழி போட வேண்டாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

## மும்பையில் நிலச்சரிவு 17 பேர் பலி

(டில்லி)

மும்பையில் நிலச்சரிவில் 15 பேர் உயிரிழப்பு-இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மும்பை- செம்பூரிலுள்ள பாரத் நகர் குடியிருப்புப் பகுதியின் சுவர்கள் நிலச்சரிவில் இடிந்து விழுந்துள்ளன.

இதில் வீடுகளின் உள்ளே தூங்கிக் கொண்டிருந்த 15 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் 8 பேர் இடிபாடுகளின் உள்ளே சிக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றமையினால், தேசியப் பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (8-7)



## கொரோனா நோயாளிகளுக்கு காசநோய் பரிசோதனை

(டில்லி)

கொரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு காசநோய் பரிசோதனை செய்ய வேண்டும் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.

இது குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

கொரோனா பாதிப்புக்கு உள்ளானவர்களிடம் காசநோய் அதிகரித்துள்ளதாக அண்மையில் சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இதையடுத்து, கொரோனா நோயாளிகள் அனைவருக்கும் காசநோய் பரிசோதனை செய்யும்படியும், காசநோயாளிகள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்யும்படியும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

டி.பி. மற்றும் கொரோனா ஆகிய இரண்டுமே தொற்று நோய் மற்றும் நுரையீரல்களைத் தாக்கக்கூடியது என்பதாலும் இருமல், காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் என அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருப்பதாலும் இந்த இரு நோய்களும் மேலும் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

கறுப்புப் பூஞ்சை போன்று காசநோயும், சந்தர்ப்ப பாதிப்பு என்பதால் கொரோனா பாதிப்பு ஒரு தனிநபரை தீவிர டி.பி. பாதிப்புக்கு ஆளாக்கும் வாய்ப்புள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)


## உலகளவில் கொரோனா

உயிரிழப்பு :- 4 104 507

தொற்று :- 191 075 204

(நேற்றைய மாலை நிலைவரம்)

## 18 வயது நிரம்பிய அனைவருக்கும் பிரித்தானியாவில் முதல் டோஸ் தடுப்பூசி




(லண்டன்)

பிரித்தானியாவில் 18 வயது நிரம்பிய அனைவருக்கும் முதல் டோஸ் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படும் என சுகாதார அமைச்சு நேற்றைய தினம் தெரிவித்துள்ளது.

இதுவரை, இங்கிலாந்தில் 18 வயது பூர்த்தி செய்த 87.8 விகிதமானோருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

வேகமாகப் பரவக்கூடிய டெல்டா மாறுபாட்டால் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முகமாக கட்டுப்பாடுகளை தளர்த்த பிரதமர் போரிஸ் ஜோன்சன் முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அயர்லாந்தில் அதிகரிக்கும் வெப்பநிலை

(டுப்ளின்)

வடக்கு அயர்லாந்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 30 செல்ஷியஸிற்கு மேல் வெப்பநிலை காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கவுண்டி டவுனில் உள்ள நியூட்டவுனார்ட்ஸிக்கு அருகிலுள்ள பலிவாட்டிகொக் பகுதியில் 31.2 சி வெப்ப நிலையே பதிவாகியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 1976 மற்றும் 1983 கோடை காலங்களில் 30.8 செல்ஷியஸ் வெப்பநிலை பதிவாகியிருந்தமையே அதிகூடிய வெப்பநிலை என்பது குறிப்பிடத்தக்கது. (8-7)

## 20 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவில் குரங்கம்மை



(வோஷிங்டன்)

20 ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்காவில் ஒருவருக்கு குரங்கம்மை நோய் கண்டறியப்பட்டுள்ளது.

நைஜீரிய நாட்டில் இருந்து, அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்திற்கு திரும்பிய பயணி ஒருவருக்கு, உயிர்க் கொல்லி நோயான குரங்கம்மை நோய் கண்டறிய டுள்ளது.

கொரோனாத் தொற்றால் உ நாடுகள் அச்சத்தில் இருக் நிலையில், குரங்கம்மை நே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, தேச அரங்கில் அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. (8

## இந்திய- பாகிஸ்தான் எல்லையி 61 ரோன்கள், 4 சுரங்கங்கள் கண்டுபிடி

(டில்லி)

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் 61 ட்ரோன்களும் 4 சுரங்கங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் ராகேஷ் அஸ்தானா தெரிவித்தார்.

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை சார்பில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ருஸ்தம்ஜி நினைவுச் சொற்பொழி பேசிய ராகேஷ் அஸ்தானா, தியா- பாகிஸ் தான் எல்லை 61 ட்ரோன்கள் மற்றும் 4 சு கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் எ கடந்த ஒரு வருடத்தில் இந் எல்லைப் பகுதியில் ஊடுருவி பேர் கொல்லப்பட்டுள்ளனர். பேர் கைது செய்யப்பட்டுள்ள என்று அவர் தெரிவித்தார். (8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

## அமெரிக்காவினால் மீண்டும் உருவான புதிய 'குவாட்' கூட்டமைப்பு

(வோஷிங்டன்)

**ஆப்கானிஸ்தானில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் அமெரிக்காவுடன் இணைந்து புதிய 'குவாட்' கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது.**


ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் வெளியேறி வருகின்றன. கிட்டத்தட்ட முழு படைகளும் வெளியேறிவிட்ட நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளின் கை மீண்டும் ஓங்கியுள்ளது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அமெரிக்கா ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 4 நாடுகள் இணைந்து புதிய 'குவாட்' கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

ஆப்கானிஸ்தானில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க பிராந்திய நட்பு நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. மேலும் வளர்ந்து வரும் பிராந்திய வர்த்தக பாதைகளை திறப்பதற்கான வரலாற்று வாய்ப்பை உணர்ந்து, வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் போக்குவரத்து இணைப்புகளை உருவாக்குவதற்கும் வணிகத்தில் இருந்து வணிக உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பிராந்திய நட்பு நாடுகள் ஒத்துழைக்க விரும்புகின்றன.

அதன்படி பரஸ்பர ஒருமித்த கருத்துடன் இந்த ஒத்துழைப்பின் முறைகளை தீர்மானிக்க வரும் மாதங்களில் பிராந்திய நட்பு நாடுகள் சந்திக்க ஒப்புக் கொண்டுள்ளன. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (8-7)



உலகின் மிகப்பெரிய கோளரங்கமான வானியல் அருங்காட்சியகம் சீனாவின் ஷாங்காய் நகரில் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது. 58,600 சதுர மீற்றர் பரப்பளவில் நவீன தொழில்நுட்பத்துடன் புதுமையான கட்டட கலையமைப்பில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

## கால்களை இழந்த பூனைக்கு மருத்துவர் செய்த பேருதவி



(எதென்ஸ்)

கிரீஸில் மூன்று கால்களை இழந்த பூனைக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நடக்க முடியாத நிலையில் கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட இந்த பூனைக்கு மருத்துவர்களும் பொறியாளர்களும் இணைந்து மூன்று கால்களைப் பொருத்தியுள்ளனர். டைட்டானியம் மூலம் கால்களின் உட்பாகங்களும் 3டி பிரிண்டிங் தொழில்நுட்பத்தின் மூலம் பிளாஸ்ரிக் பாதங்களும் உருவாக்கப்பட்டன.

இவை வெற்றிகரமாகப் பொருத்தப்பட்ட நிலையில், அடுத்த 10 விநாடிகளில் இயல்பாக நடமாடத் தொடங்கியிருக்கிறது. (8-7)

## வடமேற்கு நைஜீரியாவில் அதிகரிக்கும் ஆயுதம் ஏந்தியவர்களின் அட்டகாசம்



(ஜம்பாரா)

வடமேற்கு நைஜீரியாவில் ஆயுதம் ஏந்தியவர்கள் 60 பேரைக் கடத்திச் சென்றுள்ளதாகவும் ஒருவரைக் கொலை செய்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜம்பாரா மாநிலத்தில் ஒரே இரவில் நுழைந்த குறித்த கடத்தல்கார்கள் கிராமத் தலைவரை சுட்டுக் கொன்றதுடன் மற்றவர்களை கடத்திச்சென்றுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அங்குள்ள ஐந்து கிராமங்களுக்கு 70 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் சென்ற அவர்கள் வாகனத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் ஆயுதக் கொள்ளைகள் மற்றும் கடத்தல்காரர்கள் தொடர்ந்தும் பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முக்கியமாக வடமேற்குப் பகுதிகளில் கடத்தல் சம்பவங்களைத் தடுக்க பாதுகாப்புப் படையினர் பெரும்பாலும் தவறிவிடுகிறார்கள் என்றும் கூறப்படுகின்றது. (8-7)

## ஐரோப்பாவில் வெள்ளப்பெருக்கு இறப்பு எண்ணிக்கை உயர்வு



(பேர்லின்)

மேற்கு ஜேர்மனி மற்றும் பெல்ஜியத்தில் ஏற்பட்ட பேரழிவு காரணமான வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 170 ஆக அதிகரித்துள்ளது.

அரை நூற்றாண்டுக்கும் பின்னர் ஜேர்மனியை தாக்கிய மிக மோசமான இயற்கை பேரழிவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மட்டும் சுமார் 143 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிக நீர் நிலைகள் காரணமாக பல பகுதிகளில் தொடர்பாடல்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக நூற்றுக்கணக்கான மக்களை தொடர்புகொள்ள முடியவில்லை என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர். (8-7)

## கோவிஷீல்ட் செலுத்திய பயணிகளுக்கு அனுமதி வழங்கும் பிரான்ஸ் அரசு

(பாரிஸ்)

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுவோர் செலுத்தியிருக்க வேண்டிய கொரோனா தடுப்பூசிகளின் பட்டியலில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் பெயர் இடம்பெற்றிருந்தது.

கோவிஷீல்ட் செலுத்திக் கொண்ட பயணிகளுக்கு அனுமதி வழங்க பிரான்ஸ் அரசு முடிவு செய்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுவோர் செலுத்தியிருக்க வேண்டிய கொரோனா தடுப்பூசிகளின் பட்டியலில் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் பெயர் இடம்பெற்றிருந்தது.


ஆனால் 'கோவிஷீல்ட்' தடுப்பூசியின் பெயர் அதில் இடம்பெறாததால், இந்தியாவில் கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து இந்திய அரசு சார்பில் இந்த விவகாரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களையும் அனுமதிக்க பல்வேறு ஐரோப்பிய யூனியன் நாடுகள் சம்மதித்த நிலையில், தற்போது பிரான்ஸ் நாட்டு அரசும் கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களை அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்நாட்டுப் பிரதமர் ஜீன் கேஸ்டக்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அஸ்ட்ராஜெனெகாவால் உருவாக்கப்பட்டு, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் வெளிநாடுகளிலிருந்து பிரான்ஸ் வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரம், டெல்டா வகைக் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக எல்லைகளில் சோதனைகள் கடுமையாக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னைகளுக்கு சேதனப் பசளையிட்டு தேங்காய் உற்பத்தியினை கூட்டுவதற்கு தென்னைச் செய்கையாளர்கள் முன்வர வேண்டும்



தென்னைச் செய்கையாளர்களிடையே ஒரு ஆதங்கம்! என்னவெனில் எதிர்காலங்களில் APM, YPM போன்ற செயற்கை உரமிடாமல் ஆயிரக் கணக்கான தென்னை மரமுள்ளவர்கள் எவ்வாறு பசளையிட்டு உற்பத்தியினைக் கூட்டலாம் என்ற ஏக்கத்தினை நான் கண்கூடு பார்க்கின்றேன். பயப்படாதீர்கள்! இருக்கவே இருக்கிறது தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறைகள். நம் முன்னோர்களின் காலத்தில் செயற்கை உரங்களை தென்னைகளுக்கு பாவித்ததில்லை. மாறாக இயற்கை உர வகைகளையே பாவித்து உற்பத்தியினைக் கூட்டி வருமானத்தினை பெற்றனர். அந்த வகையில் தென்னை களுக்கான சேதனப பசளை யினை தென்னையின் உற்பத்தி பொருட்களைக் கொண்டே தயாரிக்க முடியும் என்பதனை அறிவீர்களா?

தென்னைகளிலிருந்து மண்புழு கொம்போஸ்ட் உரம் (கூட்டுரம்) எவ்வாறு தயாரிக்க முடியும்என்பதனை எழுதியுள்ளேன்.

அசேதன உரப்பாவனைக்கு மாற்றீடாக மேற்படி மண்புழு உரத்தினை (**Vermi Compost**) தென்னைகளுக்கு பாவிப்பதன் மூலம் தேங்காயின் உற்பத்தியை நிச்சயம் கூட்ட முடியும் என்ற விடயம் மட்டுமல்லாமல் மைற் தாக்கத்திற்கு எதிர்ப்புத் திறனை ஊக்குவிக்கும் ஒரு காரணியாகவும் அமைகின்றது.

### தென்னோலைகளிலிருந்து மண்புழு கொம்போஸ்ட் (கூட்டுரம்)

இயற்கைச் சூழலைப் பாதிக்காமல் தொடர்ச்சியாக சீரான விளைச்சலைப் பெற இயற்கை உரங்களை இடுவது மிக முக்கியமானதாகும். தொடர்ந்து இரசாயன உரங்கள் இடுவதனால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுவதுடன் மட்டுமல்லாது பயிர் உற்பத்தித்திறன் குறைவடையும். மண்ணிலுள்ள மண்புழுக்கள் இறப்படையும்.

நன்கு பராமரிக்கப்பட்ட தென்னந்தோட்டத்தில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹெக்டேயருக்கு 6-8 தொன்கள் வரை காய்ந்த ஓலைகளை உக்கச் செய்வதன் மூலம் வளம் பொருந்திய இயற்கை உரத்தினைப் பெற முடியும். தென்னோலைகளில் லிக்னின், செலுலோஸ் போன்ற இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் உள்ளதால் ஓலைகள் இயற்கையாக உக்குவதற்கு அதிக காலமாவதுடன் தரம் குறைந்த கொம்போஸ்ட் தான் கிடைக்கின்றது. "யுடிலிஸ்" வகை மண்புழுக்கள் காய்ந்த தென்னோலைகளை வேகமாக உக்கச் செய்வதுடன், தரம் வாய்ந்த கொம்போஸ்ட் உரத்தினை உருவாக்கும் திறன் பெற்றது. நன்கு பராமரிக்கப்பட்ட ஒரு ஹெக்டேயர் தென்னந்தோட்டத்திலிருந்து கிடைக்கும் காய்ந்த தென்னோலைகளிலிருந்து 4 தொன் மண்புழு கொம்போஸ்ட் உரம் தயாரிக்கலாம்.

### மண்புழு கொம்போஸ்ட் உரம்

தென்னோலைமற்றும்கழிவுப் பொருட்கள் மண்புழுவினால் உண்டு சமிக்கப்பட்டு மற்றும் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டு வெளியே தள்ளப்படுகின்றது. இந்த மக்கிய கழிவுப் பொருட்களே "மண்புழு கொம்போஸ்ட் உரம்" என அழைக்கப்படுகின்றது.

### யுடிரிலஸ் மண்புழுவினை விருத்தி செய்தல் முறை

மாட்டுச் சாணம் மற்றும் உக்கிய இலைகளை 1:1 என்ற விகிதத்தில் கலந்து கலவையை சீமெந்து தொட்டி அல்லது மரப் பெட்டி அல்லது பிளாஸ்ரிக் தொட்டியிலோ இடவேண்டும். தேவையான வடிகான் வசதியினையும் செய்யவேண்டும். 50 யுடிரிலஸ் மண்புழுக்கள், பத்து கிலோ கழிவுப்பொருட்களுக்குள் விட வேண்டும். இந்த கலவையினை காய்ந்த இலை அல்லது வைக்கோலினால் அல்லது ஈரச் சாக்கினால் மூடி விடவேண்டும். இது ஈரப்பதனை காக்க உதவுகின்றது. மழை, வெயிலிலிருந்து பாதுகாக்க பந்தல் அமைக்கலாம். 30-40% ஈரப்பதனை வைத்திருக்க வேண்டும். தேவைக்கேற்றவாறு தண்ணீர் தெளிக்கலாம். 1-2 மாதங்களுக்குள் யுடிரிலஸ் மண்புழுக்களின் எண்ணிக்கை முப்பது மடங்காக அதிகரிக்கும். இப்புழுக்களை கொண்டு மண்புழு கொம்போஸ்ட் உரத்தினைத் தயாரிக்கலாம்.



### மண்புழு கொம்போஸ்ட் உரத்தினை தயாரிக்கும் முறை

இந்த உரத்தினை நான்கு தென்னை மரங்களுக்கு மத்தியில் குழிகள் வெட்டியோ அல்லது தென்னை மரத்தின் வேர்ப்பகுதிகளில் குழிகள் எடுத்தோ (2m நீளம், 20cm ஆழம்) (சாதாரணமாக உரமிடும் பகுதி) அல்லது சீமெந்து தொட்டிகளிலோ தயாரிக்கலாம். ஆழம் ஒரு மீற்றருக்குள் இருக்க வேண்டும். முதிர்ந்த காய்ந்த தென்னோலைகளைச் சேகரித்து 3 முதல் 6 மாதங்கள் வைக்க வேண்டும். முழு ஓலைகளாகவோ அல்லது துண்டுகளாக்கியோ பயன்படுத்தலாம். துண்டுகளாக்கினால் விரைவில் உக்கும். ஆரம்பத்தில் காய்ந்த தென்னோலைகளை உண்ண மண்புழுக்கள் தயக்கம் காட்டுகின்றன. எனவே 1 தென்னோலைக்கு 100 Kg மாட்டுச் சாணம் என்ற விகிதத்தில் தண்ணீரில் கரைத்து ஓலைகளின் மீது தெளிக்க வேண்டும். ஓலைகளை 5 அடுக்குகளாகவோ அல்லது முழுவதனையும் இட்டு சாணத்தினைத் தெளிக்கலாம். உக்கல் நிகழ்வு விரைவாக நடைபெறும்.

மூன்று வாரங்கள் கழிந்த பின்பு 100 மண்புழுக்களை (1தென்னோலைக்கு) விட வேண்டும். இதன் மேற்பரப்பினை காய்ந்த புல், வைக்கோல் அல் லது தென்னோலைகளால் மூடி விடலாம்.

### கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள்

- சூரிய ஒளியின் நேரடி தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.
- ஈரப்பதன் 30-40 சதவீதம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பறவைகள், எலிகள், பெருச்சாளிகள், எறும்புகள் தொல்லையிலிருந்து பாதுகாக்க வேண்டும்.
- 2-3 மாதங்களுக்குள் 70 சதவீதம் தென்னோலைகள் உக்கி கொம்போஸ்ட் உரமாகிவிடும். இத்தருணத்தில் தண்ணீர் தெளிப்பதனை நிறுத்திவிட வேண்டும். இதனால் மண்புழுக்களானது கீழ்ப்பகுதியினை நோக்கி குவியத் தொடங்கும் பின்பு, கொம்போஸ்ட்டிலிருந்து மண்புழுக்களை தனியே பிரித்தெடுக்க வேண்டும்.
- தோட்டத்தில் நெருப்பு வைக்கும் செயற்பாடு செய்யக் கூடாது.

### மண்புழு கொம்போஸ்ட் உரத்தின் பயன்கள்

1. இதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பயிர்களினால் எளிதில் உறிஞ்சப்படும் நிலையில் உள்ளது.
2. நைதரசன் 1.2-1.8%, பொசுபரஸ் 0.1-0.2%, பொட்டாசியம் 0.2-0.4% என்ற அளவில் உள்ளது. மற்றும் நுண் ஊட்டச்சத்துக்களும் அடங்கியுள்ளன.
3. மண்புழு கொம்போஸ்ட் உரத்தின் எடை குறைந்த அளவில் உள்ளதால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வது எளிது.
4. பயிர்களின் வளர்ச்சியை வேர் வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடிய ஊக்கிகள் உள்ளன.
5. பயிர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய நுண்ணுயிர்கள் அதிகளவில் உள்ளன.
6. மணமற்றதாக உள்ளதனால் கையாள்வது எளிதாக இருக்கும்.
7. மண்ணின் இடைவெளிகள் தண்ணீர் தேக்குதலை மேம்படுத்துகின்றது.
8. மண்ணின் வளத்தினை (இரசாயனத்தன்மை) அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது.
9. மண்புழுக்களின் செயற்பாடு காரணமாக தாவரங்களின் வளர்ச்சிக்கு அவசியமான கல்சியம் துணிக்கைகளை மண்ணிற்கு போசணையாக சேர்க்கின்றது.
10. தாவரங்கள் மற்றும் மிருகங்களின் உடற்பகுதிகளை உக்கச் செய்வதன் மூலம் மண்ணிற்கு போசணையினை அளிக்கின்றது.
11. மண்ணின் உயிரினவியல் குணம் அதிகரிக்கச் செய்தல்.
12. தாவர வளர்ச்சிக்கு இடையூறு செய்யும் பூங்கசுக்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும்.

இத்தகைய தொழில்நுட்பத்தினைப் பாவித்து தென்னைச் செய்கையில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய மண்புழு கொம்போஸ்ட் உரம் தேவையற்ற செலவீனங்களைக் குறைக்கும்.

### இந்திய தமிழ்நாட்டு முறையில்:-

- தென்னைக்கு உயிர் உரமான அசற்றோபக்ர் அல்லது பொசுபோ பக்றீரியா நுண்ணுயிர்களை 1 பக்கெட் 200g 10Kg மக்கிய சாணி எருவுடன் கலந்து இடுவதனால் வேர்களின் உற்பத்தி அதிகரிக்கும்.
- தென்னந்தோட்டத்தில் ஏக்கருக்கு 12 கிலோ முதல் 15 கிலோ சணலினை விதைத்து 45 நாட்களில் உழவு செய்யலாம். ஈரலிப்பு குறைவாக உள்ள தோட்டங்களில் தென்னையினைச் சுற்றி 6 அடி சுற்றுவட்டப் பரப்பினுள் சுமார் 50g சணல் விதைகளை விதைத்து வளர்ந்ததும் பூக்கும் முன்பு கொத்தி பிரட்டிவிட வேண்டும். இதில் 15-20kg நைதரசன் சத்து கிடைக்கும். இவ்வாறு வருடத்திற்கு மூன்று முறை செய்தல் வேண்டும்.
- தும்புச் சோற்றியை மக்க வைத்து மக்கிய எருவிற்கு பதிலாக தென்னைக்கு இடலாம். மக்கிய தும்புச் சோற்றி உரம் மரங்களுக்கு 50kg இடுவதன் மூலம் நீர் பிடிப்பு தன்மை அதிகரிக்கின்றது.

### நவீன முறையில் தும்புச் சோற்றித்தூள் (கதம்பைத் தூள்) கொம்போஸ்ட் உரம் தயாரித்தல்.

"நுண்ணுயிர் உதவியினால் தும்புச் சோற்றியினை சிறந்த உரமாக்கலாம்." தும்புத் தொழில் செய்யும் இடங்களிலிருந்து தும்புச் சோற்றித்தூள் அதாவது நார்க்கழிவு குப்பையாக குவிக்கப் பட்டிருக்கும். இந்த தும்புச் சோற்றி தூளை கொம்போஸ்ட் ஆக்க வேண்டுமானால் "புளுரோட்டஸ்" என்று சிப்பிக்காளான் தேவைப்படுகின்றது.

ஒரு தொன் கொம்போஸ்ட் உரம் (கூட்டுரம்) தயாரிக்க தேவையான பொருட்கள்:

தேவையான பொருட்கள்

1. தும்புச் சோற்றி - 1 தொன்
2. சுண்ணாம்பு - 5 கிலோ
3. புளுரோட்டஸ் -5 போத்தல் (பக்கெட்)
4. யூரியா - 10 கிலோ
5. றொக்பொஸ்பேட்-50 கிலோ
6. தழை (ஊதாப்புச் செடி, பூவரசு)
7. வேம்பு, களைச்செடிகள், கொன்றை
8. கிளிரிசீடியா எதுவானாலும்- 200 கிலோ
9. சாணி உரம் - 200 கிலோ

தும்புச் சோற்றித்தூள் கொம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு முதல் நாள் ஒரு தொன் தும்புத் சோற்றித் தூளுக்கு 5 கிலோ சுண்ணாம்மை தண்ணீரில் கரைத்து தெளித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தும்புச் சோற்றித்தூள் கொம்போஸ்ட் உரம் தயாரிக்க குழி தோண்ட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், தும்புச் சோற்றித்தூள் காற்றிலோ அல்லது பறவைகள் மூலம் அழிவதைத் தடுக்க கீழ்கண்ட முறையை கடைப்பிடிக்கலாம்.

4 அடி உயரத்தில் 6 மட்டைகளை வரிசையாக ஒரு மீற்றர் இடைவெளியில் நடவேண்டும். மொத்தத்தில் இதன் நீளம் 5 மீற்றர் ஆகும். இதற்கு இணையாக ஒரு மீற்றர் அகலத்தில் ஆறு மட்டைகளை நட்டால் அது நீள் சதுர வடிவில் இருக்கும். இதன் உள்பக்கமாக ஓலை கீற்றினை தலைகீழாக ஒரு மீற்றர் உயரத்திற்கு கட்டி வைத்தால் உரம் தயாரிப்பதற்கான திடல் ரெடியாகிவிடும்.

இதில் 4 அங்குல உயரத்தில் தும்புச் சோற்றித்தூளை பரப்ப வேண்டும். அது 100 கிலோ அளவு இருக்கும். அதன் மேல் ஒரு போத்தல்/பக்கெட் புளுரோட்டஸ்காளானை விதைக்க வேண்டும். அதன்பின், இரண்டாவது அடுக்காக 4 அங்குல கனத்தில் 100 கிலோ தும்பு சோற்றித் தூளை பரப்ப வேண்டும். இதன் மேல் 40 கிலே தழை உரம் இட்டபின், 2 கிலோ யூரியா, 10 கிலோ றொக்பாஸ்போட் தூவி, பின் 40 கிலோ சாணி உரத்தை கரைத்துத் தெளிக்க வேண்டும். இப்போது இரண்டாம் அடுக்கு ரெடியாகிவிட்டது. மீண்டும் 4,6,8,10 அடுக்குகளை 2ம் அடுக்கு போலவும் மாறிமாறி அடுக்க வேண்டும். 10ம் அடுக்கிற்கு மேல் 2 அங்குல உயரத்தில் தும்புச் சோற்றித்தூளை போட்டு விட்டு அதன்மேல் வாழைத் தண்டு, சருகு, ஓலை அல்லது மண் கொண்டு மூடி விட வேண்டும். தினசரி தும்புச் சோற்றித் தூளை எடுத்து பிழிந்தால் இரண்டு துளி தண்ணீர் சொட்டும் அளவிற்கு தண்ணீர் நனைத்துக் கொண்டு இருக்க வேண்டும். ஈரமின்றி படுக்கை காய்ந்துவிடக் கூடாது. இவ்வாறு இரண்டு மாதங்கள் வைத்திருக்கும் போது, தும்பு சோற்றித் தூள் நன்கு மக்கி கறுப்பாகி விடுகிறது. 3 அடி உயரத்தில் போட்ட தும்புச் சோற்றித்தூள் 2 அடியாக குறைந்து விடுகிறது.

இவ்வாறு கொம்போஸ்ட் ஆகும் போது இதில் உள்ள லிக்னின் மற்றும் செலுலோஸ் மக்குவதால் இதிலுள்ள கரிமத்தின் அளவு குறைகிறது. தழைச் சத்தின் அளவு அதிகரிக்கிறது. கரிமம், தழைச்சத்தின் விகிதம் குறைவாகும் போது பயிர்களுக்கு சிறந்த உரமாகிறது. தவிர கடற்கரை ஓரங்களில் உள்ள உப்பு நீரால் விளைச்சல் குறைந்த தென்னை மரங்களுக்கு 50 கிலோ தும்பு சோற்றித்தூள் கொம்போஸ்ட் உரத்துடன் ஒரு கிலோ ஜிப்சம் கலந்து இடுவதால் அதிகம் காய்க்கும்.

ஜெ.சத்தியேந்திரன்
உதவிப்பிராந்திய முகாமையாளர்
தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை
பிராந்தியக் காரியாலயம் -பளை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 505 6263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா திரிபு வைரஸ் கட்டுப்பாட்டில் உள்ளது

## எனினும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம்

(கொழும்பு)

இலங்கையில் டெல்டா கொவிட் திரிபின் பரவல் இன்னும் கட்டுப்பாட்டில் உள்ளதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைராலஜிஸ்ட் மருத்துவர் நதீகா ஜானகே தெரிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிகாட்டுதல்களை மக்கள் எந்த அளவிற்குக் கடைப்பிடிக்கின்றனர் என்பதைப் பொறுத்து டெல்டா திரிபின் பரவலானது அமைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். "நாங்கள் இன்னும் இங்கிலாந்து திரிபினை அதிக மாதிரிகளில் காண்கிறோம்.

அவ்வப்போது டெல்டா திரிபினை பார்க்கிறோம். அதாவது டெல்டா திரிபினை கட்டுப்படுத்தும் நிலையில் நாங்கள் இன்னும் இருக்கிறோம். எனினும், எதிர்காலத்திலும் டெல்டா திரிபின் பரவலைக் கட்டுப்படுத்த முடியுமா? என்பதே கேள்விக்குறியாக உள்ளது. புதிய வழிகாட்டுதல்களை நாம் எந்த அளவிற்கு கடைப்பிடிக்கின்றோம் என்பதைப் பொறுத்தே இதனை கட்டுப்படுத்த முடியும் என்றார். (4-5)

# புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கோடிக்கணக்கான பணம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு கொட்டாவ பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 13.9 கோடி ரூபாய் பணம் மீட்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவரின் வீட்டில் இந்த பணம் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய ஹரக் கட்டகே என்பவரின் உதவியாளரான சரித் சந்த கெழும் எனப்படும் ரன் மல்லியின் மைத்துனரின் வீட்டிலேயே இந்த பணம் மறைத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்துடன் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரும் கொட்டாவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (4-5)

# குற்றவியல் கும்பலின் தலைவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

(கொழும்பு)

திட்டமிடப்பட்ட குற்றவியல் கும்பல் தலைவரான லலித் வசந்த என்பவர் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

அவர்மீது ஆறு கொலைகள் உட்பட பல்வேறு குற்றவியல் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீதுவை, பேஸ்லைன் வீதியில் சந்தேகத்திற்கிடமான வாகனத்தை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பின்தொடர்ந்து சோதனை மேற்கொள்ள முயற்சித்த வேளையிலேயே இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளான லலித் வசந்த, நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (4-5)

# சுகாதார விதிமுறை மீறல் மேலும் 368 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 368 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றில் அதிகளவான கைதுகள் குளியாப்பிட்டியவில் இடம்பெற்றுள்ளது.

அதன்படி அங்கு 117 பேரும், கண்டியில் 51 பேரும், கம்பளையில் 31 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-5)

# ஐந்து மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக வடக்கு-கிழக்கு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அநுராதபுரம் மற்றும் திருகோணமலை ஆகிய 5 மாவட்டங்களுக்கே சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழையுடனான கால நிலையின் போது அவதானத்துடன் செயற்படுமாறு மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வயலின் வந்த கதை

ஒரு சங்கீத வித்துவான். அவர் தம்முடைய சீடர்களோடு பல்லக்கிலே போய்க் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கொள்ளைக்கூட்டம் எதிரிலே வந்து வழிமறித்தது. பல்லக்கிலே இருந்த நகை, பணம், உணவுப் பொருட்கள் எல்லாவற்றையும் கொள்ளையடித்தார்கள்.

அந்த வித்துவான் கையிலே ஒரு பெட்டி வைத்திருந்தார். அதையும் எடுக்க வந்தார்கள்.

"ஐயா இந்தப் பெட்டியை மட்டும் எடுக்க வேண்டாம். வேறு எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இது மட்டும் என்னிடம் இருக்கட்டும்!" என்றார் வித்துவான்.

கொள்ளைக்கூட்டத் தலைவனுக்கு இவர் இப்படிச் சொன்னது ஆச்சரியமாக இருந்தது. "அப்படி அந்தப் பெட்டியிலே என்ன தான் இருக்கின்றது?" என்று கேட்டான்.

"நான் என்னுடைய பிள்ளை மாதிரி பாவித்து வருகிற வாத்தியம் ஒன்று வைத்திருக்கின்றேன். இதிலே உங்களுக்கு உபயோகமானது எதுவும் இல்லை" என்றார்.

"அதுசரி அந்த வாத்தியக்கருவி உன் பிள்ளை மாதிரி என்று சொல்லுகிறாயா? அப்படி என்றால் அது உன்னிடம் பேசுமா?" என்றான்.

ஆமாம் இதை எல்லோருடனும் பேசவும் வைக்கலாம். பாடவும் வைக்கலாம்! என்றார்.

"அப்படி என்றால் என் பெயரைச் சொல்லி அதைக் கூப்பிட வை பார்க்கலாம்!" என்றான். வித்துவான் பெட்டியைத் திறந்தார். உள்ளே இருந்த இசைக்கருவியை வெளியே எடுத்தார்.

ஒவ்வொருத்தர் பெயராக கேட்டார். அதையெல்லாம் அப்படி அப்படியே வாசித்துக் காட்டினார். அதைக் கேட்டதும் அவர்களுக்கு எல்லாம் ஆச்சரியமாக போய் விட்டது.

"எங்கே இதைப் பாடச்சொல்லு பார்க்கலாம்!" என்றான் அந்தக் கூட்டத்தில் ஒருத்தன்.

உடனே அந்த வித்துவான் சில நாட்டுப் புறப்பாடல்கள், மீனவர் பாடல்கள் எல்லாம் வாசித்துக் காட்டினார்.

கொள்ளைக்கூட்டம் ரொம்பவும் ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது. ஒருத்தன் கேட்டான்... "இதை மட்டும் கொடுக்க மாட்டேன் என்கிறாயே இதை வைத்துக் கொண்டு என்ன செய்வாய். இது உனக்குச் சோறு போடுமா?" என்றான்.

"ஆமாம் இது சோறு போடும், துணிமணிகளும் கொடுக்கும், மன்னர் முன்னால் இதை வாசித்துக் காட்டினால் எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். இப்போது நீங்கள் எடுத்துக் கொண்ட பொருட்கள் எல்லாம் ஒரு மன்னர் கொடுத்ததுதான்" என்றார்.

கொள்ளையர் தலைவன் யோசிக்க ஆரம்பித்தான். தம்முடைய தோழர்களோடு ஆலோசனை செய்தான்.

"இவர் நமக்காக இதை வாசித்து இருந்தார். இவருக்கு நாம் சன்மானம் கொடுக்க வேண்டும்" என்று முடிவு செய்தான்.

கொள்ளையடித்த பொருட்களையெல்லாம் திருப்பிக் கொடுத்தான். அதனுடன் தங்களிடம் இருந்த காய்கனிகள், வனப்பொருட்கள் எல்லாவற்றையும் வாரி வழங்கினான்.

அது மட்டுமில்லை அவர்கள் போய்ச் சேர வேண்டிய இடம் வரைக்கும் கூடவே பாதுகாப்பாக கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்களாம்.

இது நம்ம ஊரிலே ஒரு 150 வருடத்துக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவம். அந்த சங்கீத வித்துவான் யார் தெரியுமா? அவர் பெயர் வடிவேலு. அவர் வைத்திருந்த வாத்தியம் எது தெரியுமா? அதுதான் பிடில். அதாவது வயலின். பிடில் ஒரு மேல்நாட்டு இசைக்கருவி. அதை முதல் தடவையாக கர்நாடக சங்கீதத்திலே புகுத்தியவர் இந்த வடிவேலு.

ஆங்கிலேயர்கள் பிடிலை பாலேயிற் (Ballet) பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதை ரொம்ப சிரமத்துடன் கர்நாடக இசை ஸ்வரங்கள் அதிலே வாசிக்க வருமா? என்று பார்த்து அதிலே கர்நாடக இசையை முதலிலே வாசித்துக் காட்டியவர் முத்துசுவாமி தீட்சிதரின் தம்பி பாலு தீட்சிதர்.

முத்துசாமி தீட்சிதரின் சீடர்தான் வடிவேலு. தஞ்சாவூர் மகாராஜாவின் சங்கீத வித்வத் சபையிலே வடிவேலுவையும் ஒரு முக்கிய வித்துவானாக சேர்த்துக் கொண்டார். அப்போது இவருக்கு வயது பதினான்கு தான்.

அந்த சமயத்திலே அரச சபையிலே இருந்த கிறிஸ்தவப் பாதிரியார் ஒருத்தர் வடிவேல் பிள்ளையிடம் தன்னுடைய பிடில் வாத்தியத்தைக் கொடுத்து அதை வாசிக்கிறதற்குக் கற்றுக் கொடுத்தார். அவர் கற்றுக் கொடுத்தது மேல்நாட்டு சங்கீதம். இவர் அதை வைத்துக் கொண்டு இரண்டு வருடகாலம் இடைவிடாமல் சாதகம் பண்ணி கர்நாடக சங்கீதத்தை வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

தஞ்சை அரச சபையிலே கர்நாடக இசை மேடையிலே பிடில் வாத்தியம் அரங்கேறிற்று! வடிவேலு பிள்ளைக்குச் சகல சன்மானங்களும் கிடைத்தது. ஆக வயலின் வரவுக்கு வடிவேல்பிள்ளை ஒரு முக்கிய காரணம் என்பதை யாரும் மறக்க முடியாது.


இன்றைக்கு வயலின் எல்லோர் கையிலேயும் இருக்கின்றது! என்னுடைய நண்பர் ஒருத்தர் அவருக்குச் சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர் சொன்னார்...“இன்றைக்கு சபாவிலே என்னுடைய வயலின் கச்சேரி...எக்கச்சக்கமான பாராட்டு” என்றார். “வயலின் வாசித்ததற்காகவா ?”என்றேன் “இல்லை வாசித்து முடித்த தற்கு” என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

30

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருதொல்பொருளை அழிக்கும், காயப்படுத்தும், சேதம் விளைவிக்கும் அல்லது தீட்டுப்படுத்தும் நபர் ஒரு குற்றவாளியாகக் கருதப்படுவதோடு ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் ரூ.50 ஆயிரத்திற்குக் குறையாத மற்றும் ரூ.250,000.00 இற்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படும் அல்லது 2 வருடங்களுக்கும் குறையாத மற்றும் 5 வருடங்களுக்கும் மேற்படாத சிறைத் தண்டனை விதிக்கப்படும். அல்லது அத்தகைய அபராதம் மற்றும் சிறைத் தண்டனை ஆகிய இரண்டும் விதிக்கப்படும். மேலும் இந்த வழக்கின் விசாரணை முடிவடையும் வரை குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பிணை வழங்க முடியாது என்று சட்டம் கூறுகிறது.

ஒரு பொருள் நினைவுச்சின்னங்களாக அறிவித்ததைத் தொடர்ந்து, அந் நினைவுச் சின்னங்களின் முக்கியத்துவத்தையும் அவற்றுடன் தொடர்புடைய சூழலையும் கருத்தில் கொண்டு, அத்தகைய நினைவுச் சின்னங்களின் வரலாற்றுத் தன்மை மற்றும் தொல்பொருள் மதிப்புக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களைத் தணிக்கும் நோக்கத்துடன், கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 (1) இல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, நினைவுச் சின்னத்திலிருந்து 400 யார் வரையிலான ஒரு குறிப்பிட்ட பிரதேசம் ஒதுக்கீட்டு நிலமாக பிரகடனப்பட்டு, கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்கள் அழித்தல், கற்கள் உடைத்தெடுதல் அல்லது குண்டு வெடிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தடை செய்யப்படும்.

அரச காணியொன்றை, காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் அல்லது காணி ஆணையாளர் நாயகம் அங்கீகாரத்தை நிராகரித்தால் காணி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அரச காணியின் எந்தவொரு திட்டவட்டமான பிரதேசத்தையும் இக்கட்டளைச் சட்டத்தின் பணிகளுக்காகத் தொல்பொருளியல் பாதுகாப்பு பிரதேசமாக வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்த முடியும். இக்கட்டளைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அல்லது வேறு விதமாக அரச காணியொன்றில் எந்தவொரு பிரதேசத்தையும் தொல்பொருளியல் பணிகளுக்காக ஒதுக்கியிருந்தால் அதை தொல்பொருளியல் பாதுகாப்பிடமாகக் கருத வேண்டும்.

தொல்பொருளியல் ரீதியாக நிலப்பாகமொன்றை அரசாங்கம் சுவீகரிப்பது சம்பந்தப்பட்ட நடவடிக்கை முறை 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33, 34, 35 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொல்பொருளியல் ரீதியாக நிலப்பாகமொன்றை அரசாங்கம் சுவீகரிப்பது சம்பந்தப்பட்ட நடவடிக்கை முறை 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 33, 34, 35 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

தனியார் காணியொன்றைச் சுவீகரிப்பதற்கு உரிமையாளரின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவருக்கு/அவளுக்கு நட்டஈடு செலுத்த வேண்டும். குறித்த பணிக்காக மதிப்பீட்டு அறிக்கையொன்றை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். பிரதேச செயலாளர் நில அளவை கட்டளையொன்றை வழங்க வேண்டியது அவசியமாகும். பிரதேச செயலகத்தில் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குறித்த நிறுவனத்தின் தலைவர் மூலம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் பொருட்டு சம்பந்தப்பட்ட மாதிரிப்படிவங்களை நிரப்ப வேண்டும். காணி ஒரு மில்லியன் ரூபாவுக்கு அல்லது அதைவிட குறைந்த தொகைக்கு மதிப்பிடப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்தையும் அதற்கு மேற்பட்ட மதிப்பீடாக இருந்தால் அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் பிரதேச செயலாளர் நட்டஈட்டைச் செலுத்தியதன் பின்னர் காணியைத் தொல்பொருளியல் பாதுகாப்பிடமாகப் பிரகடனப்படுத்துவதற்கு உரிய அறிவித்தல் வரைபை மும்மொழிகளிலும் தயாரிக்க வேண்டும்.

அவ்வரைபை அதன்பின்னர் சட்டவரைஞருக்கு அனுப்பி அதன் பின்னர் அரசாங்க அச்சகத்தின் அதிபரைக்கொண்டு அச்சிட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அதுவும் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அரச காணியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அக்காணி உரித்தாக இருக்கின்ற நிறுவனத்தின் உடன்பாட்டைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் மேற்குறிப்பிட்டவாறு தொல்பொருளியல் பாதுகாப்பிடமாகப் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அரச காணியொன்றில் அத்துமீறிக் குடியேறியவர்கள் இருப்பின் வெளியேற்றும் கட்டளையின் மூலம் அவர்களைக் காணியிலிருந்து வெளியேற்ற வேண்டும். மேலே கூறப்பட்ட நடைமுறைகளை தொல்பொருளியல் திணைக்களம் பின்பற்றுகிறதா? என்பது கேள்விக்குறியே.

மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் போர் காரணமாக புறக்கணிக்கப்பட்ட 341 புராதன (பண்டைய) இடங்களை இதுவரை கண்டு பிடித்துள்ளதாகக் கூறுகின்றது.

அதில் 125 இடங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 68 இடங்கள் வவுனியா மாவட்டத்திலும் 66 இடங்கள் மன்னார் மாவட்டத்திலும் 15 இடங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 67 இடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றது. இவ்விடங்கள் எல்லாம் தொல்பொருள் திணைக்களத்தால் கையடக்கப்பட்டால் மக்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள்.

**ஒரு மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் போர் காரணமாக புறக்கணிக்கப்பட்ட 341 புராதன (பண்டைய) இடங்களை இதுவரை கண்டு பிடித்துள்ளதாக கூறுகின்றது.**

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணியொன்று நிறுவப்பட்டுள்ளது.

இது தொடர்பான பிரகடனம் 2178/17 இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜெயசுந்தரவினால் ஜூன் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இலங்கையிலுள்ள மரபுரிமைகள், இயற்கை வளங்கள் ஆகியன மனித செயற்பாடுகளினால் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இந்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளதாக அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தனித்துவத்தை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பிரபல்யப்படுத்தல் மற்றும் அம் மரபுரிமைகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் இந்த செயலணியின் பொறுப்பு என ஜனாதிபதி ஊடகப்பிரிவு கூறுகின்றது.

இந்த ஜனாதிபதி செயலணி இலங்கை தமிழர்கள், முஸ்லிம்கள் இல்லாத அனைவரும் சிங்கள பௌத்தர்கள் கொண்ட செயலணியாகும். இது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் மூன்று பகுதிகள் ஆபத்தான பகுதிகளாக அடையாளம்

(கொழும்பு)
டெல்டா கொரோனா வைரஸ் ஆபத்து அதிகம் காணப்படும் பகுதிகளாக மாளிகாவத்தை, தெமட்டகொட, கொழும்பு வடக்கு ஆகிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு நகரிலேயே டெல்டா கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட பலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை அண்மையில் கொழும்பு நகரில் மாத்திரம் 11 பேர் டெல்டா கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி ருவான் விஜயமுனி குறிப்பிட்டார்.

மேலும் இந்த நோயாளர்களுடன் தொடர்பினை பேணியவர்களும் அடையாளம் காணப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (4-5)

# சுகாதார சேவையாளர்கள் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தில்

(கொழும்பு)
ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர்கள் சங்கம் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் டெம்பிட் டியே சுகததானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்தல், புதிய சேவையாளர்களை நிரந்தரமாக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## குடும்பத்தை ஒன்றிணைக்கும் சோமவார விரதம்



**விரதம் இருப்பது எப்படி?**

சோமவார விரதத்தை சித்திரை, வைகாசி, ஆவணி, மார்கழி முதலான மாதங்களில் முதல் திங்கட்கிழமை தொடங்கி தொடர்ந்து கடைப்பிடிக்கலாம். ஆண், பெண்கள் இருவரும் கடைப்பிடிக்கலாம்.

இந்த பூஜைகளுக்கு, மஞ்சள் பொடி, குங்குமம், சந்தனம், பூமாலை, உதிரிப்பூக்கள், வெற்றிலைபாக்கு, ஊதுபத்தி, சாம்பிராணி, பஞ்சு, நல்லெண்ணெய், கற்பூரம், வெல்லம், மாவிலை, வாழைப்பழம், அரிசி, தேங்காய், தயிர், தேன், தீப்பெட்டி, பூணூல், வஸ்திரம், அட்சதை (பச்சரிசியுடன் மஞ்சள்பொடி கலந்து) பஞ்சாமிர்தம், திராட்சை, கற்கண்டு, சர்க்கரை கலந்த பசுவின்பால் ஆகிய வற்றை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

முதலில் ராகு காலத்துக்கு முன்பே பூஜையை தொடங்கவேண்டும். விடியற்காலையிலேயே விநாயகர் பூஜை செய்து சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். மஞ்சள்பிள்ளையார் பிடித்து வைத்து தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டவேண்டும்.

கலசத்தில் தண்ணீர் பிடித்து அதில் நாணயம், மஞ்சள்பொடி கலந்து கலசத்துக்கு மேலே மாவிலைக் கொத்தை செருகி, மையத்தில் மஞ்சள் தடவிய தேங்காயை வைத்து சந்தன குங்குமம் வைத்து அலங்கரிக்க வேண்டும். பின்னர் பூஜையை தொடங்க வேண்டும்.

சாதம், நெய், பருப்பு, பாயாசம், தேங்காய், வாழைப்பழம் போன்றவற்றை நைவேத்தியமாக படைக்க வேண்டும். தொடர்ந்து சிவநாமங்களை சொல்ல வேண்டும். பின்னர் தீபாராதனை, கற்பூர ஆரத்தி காட்ட வேண்டும்.

பூஜை முடிந்த பின்னர் வயதான தம்பதியரை பார்வதி பரமேஸ்வரனாக மனதில் நினைத்து சந்தனம், குங்குமம் அளித்து நமஸ்காரம் செய்ய வேண்டும். அவர்களுக்கு புது வேட்டி, ரவிக்கை துணி, வெற்றிலை பாக்கு மற்றும் பழம் இவற்றுடன் தட்சணை ஆகியவை அடங்கிய தட்டை கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அன்னமிட்டு அட்சதையை அவர்கள் கையில் கொடுத்து வணங்கி ஆசி பெறவேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## இதுவரை 2250 கர்ப்பிணி தாய்மாருக்கு தொற்று

(கொழும்பு)
2 ஆயிரத்து 250 கர்ப்பிணித் தாய்மாருக்கு வைரஸ் தொற்றியுள்ளதாக குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது. இதுவரை வைரஸ் தொற்றுக்குள்ளான 13 கர்ப்பிணித் தாய்மார் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. (4-5)

## பட்டத்தின் நூல் சிக்கி தாய், குழந்தை பலி!

(கொழும்பு)
காலி - கொழும்பு வீதியில் பட்டம் ஒன்றில் இருந்த நைலோன் நூல் மோட்டார் சைக்கிளில் சிக்கியமையினால் அதில் பயணித்த தாய் மற்றும் ஒன்றரை வயதுடைய குழந்தை ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் 6 வயதுடைய சிறுவன் காயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் தனது குடும்பத்திருடன் பெற்றோரை பார்ப்பதற்காக பயணித்த சந்தர்ப்பத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 34 வயதுடைய தாயும் ஒன்றரை வயதுடைய குழந்தையும் உயிரிழந்துள்ளனர். (4-5)

## ஹெரோயினுடன் பத்து பேர் கைது

(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகளில் பெண்ணொருவர் உட்பட 10 பேர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 240 |
| தக்காளி | 120 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 160 | 160 | 180 | 160 |
| கரட் | 150 | 170 | 180 | 180 |
| பூசணி | 80 | 100 | 60 | 120 |
| புடோல் | 80 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 280 | 350 | 280 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 250 | 230 | 250 | 350 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 140 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 160 | 140 |
| பயற்றங்காய் | 160 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 160 | 120 | 200 |
| கறிமிளகாய் | 260 | 200 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 500 | 300 | 260 |
| போஞ்சி | 200 | 240 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ளை | 100 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 140 | 130 | 150 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 50-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 200 | 220 | 140 | 200 |
| முள்ளங்கி | 120 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 100 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நரி ருசித்த அப்பம்

வயிறு நிறைய சாப்பிட்டு முடித்தது குள்ளநரி.

"என்ன ஒரு சுவை! அடடா! இவங்க பின்னாடியே போய் வீட்டைக் கண்டுபிடிக்கலாம். தினமும் இட்லியும் அப்பமும் சாப்பிடலாம்" என்று முடிவு செய்த குள்ளநரி, பாட்டியைப் பின் தொடர்ந்தது.


வீட்டுக்குச் சென்றதும் கதவைச் சாத்திக் கொண்டார் பாட்டி. குள்ளநரி பக்கத்து வயலில் ஒளிந்து கொண்டது.

சிறிது நேரத்தில் கதவு திறந்தது. யாரும் கவனிக்காதபோது வீட்டுக்குள் நுழைந்தது. அங்கிருந்த நெல் குதிரில் ஒளிந்து கொண்டது.

காலையில் இட்லியும் அப்பமும் செய்து, ஒரு பாத்திரத்தில் மூடி வைத்துவிட்டு குளிக்கச் சென்றார் பாட்டி.

அந்த நேரம் நெல் குதிரிலிருந்து வெளியே வந்து, இட்லியையும் அப்பத்தையும் திருப்தியாகச் சாப்பிட்டது. பிறகு வயலை நோக்கி ஓடிவிட்டது குள்ளநரி.

இப்படித் தினமும் இரவில் நெல்குதிரில் ஒளிவதும் காலையில் சாப்பிட்டுவிட்டு வயலுக்கு ஓடுவதுமாக இருந்தது. பாட்டிக்குப் பலகாரங்கள் காணாமல் போவது குறித்து கவலையாக இருந்தது.



"குருபரா, யாராவது நான் போனதுக்கு அப்புறம் வீட்டுக்குள்ளே வந்தாங்களா?" என்று கேட்டார்.(தொடரும்)

## மகாபாரதம்




நல்ல குலத்தில் பிறந்த சிலர் துறவு வாழ்க்கை மேலானது எனக் கருதித் தாய் தந்தையரையும், சுற்றத்தாரையும், பிறந்த வீட்டையும், உடைமைகளையும் துறந்து காடு சென்று தவவாழ்க்கை மேற்கொண்டனர்.

அவர்களிடம்கருணை கொண்ட இந்திரன் ஒரு புறா உருவில் வந்தான். விகசத்தை (ஹோமம் செய்து பிறருக்குக் கொடுத்தபின் மீதியிருக்கும் உணவு) உண்பவர்களே முக்தியடைவர் என்றது புறா.

ஆனால் அந்த துறவிகள் விகசம் என்றால் காய்கறிகள் என தவறாகப் புரிந்து கொண்டனர்.

துறவிகளும் தாங்கள் சரியான பாதையில் செல்வதாக மகிழ்ந்து "பறவையே! உன் பாராட்டுக்கு நன்றி" என்றனர்.

உடன்புறா "உங்களை நான் புகழவில்லை. நீங்கள் மூடர்கள். நீங்கள் தெளிவு பெறச் சிலவற்றைக் கூறுகிறேன்.

நாற்கால் பிராணிகளுள் சிறந்தது பசு. உலோகங்களில் தங்கம் சிறந்தது. ஒலிகளுள் வேதம் சிறந்தது. இரண்டு கால் பிராணிகளுள் வேதத்தை அறிந்தவன் சிறந்தவன்.

ஒவ்வொருவனுக்கும் பிறப்பு முதல் இறப்பு வரை பருவத்திற்கேற்பப் பல கருமங்கள் உள்ளன. தனக்குரிய கருமத்தைச் செய்பவன் புண்ணியப்பேறு பெறுவான்.

குடும்பத்தில் தாய், தந்தையர்,மனைவி, மக்கள், விருந்தினர் ஆகியோரைக்கவனிக்க வேண்டும். அவர்கள் உண்ட பின் எஞ்சிய உணவை உண்ண வேண்டும்.

இந்த இல்லறக் கடமையை ஒழுங்காக நிறைவேற்றிய பின்னரே தவம் பற்றிய எண்ணம் வர வேண்டும். அதன் பின் தேவகதி முதலான கதிகளைப் படிப்படியாகக் கடந்து இறுதியில் பிரம பதவி அடைய முடியும்.

எனவே அறவோர் போற்றும் இல்லறக் கடமைகளை முதலில் மேற்கொள்வீராக" என்று கூறியது.

உண்மை உணர்ந்த துறவிகள் இல்லற தருமத்தை மேற்கொண்டனர். ஆதலால் உமக்குரிய அரச தருமத்தை மேற்கொண்டு நல்லாட்சிபுரிவீராக" என அருச்சுனன் கூறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரப்பட்டு வார்த்தைகளை வெளியிடுபவனைப் போன்ற முட்டாள் வேறு யாரும் இல்லை.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையின் கனதியை உணராதபோது...

குளத்தில் பூத்திருக்கும் தாமரைப் பூவின் தேனை அந்தக் குளத்தில் இருக்கக்கூடிய தவளைகள் ஒருபோதும் அறிந்ததில்லை.

ஆனாலும் அவை தங்களுக்குள் சமா வைத்துக் கொள்ளும். அந்தச் சமாவில் தாமரைப்பூ பற்றியோ அதில் இருக்கக்கூடிய தேன் பற்றியோ அவை கதைப்பதுமில்லை. ஆராய்வதுமில்லை.

மாறாக ஒரு் தவளை கத்த அடுத்த தவளை அதைவிடக் கூடுதலாகக் கத்த, ஒட்டு மொத்தத் தவளைகளும் கத்தி அந்த அயலின் அமைதியைக் கெடுக்க; அதிகளவாகக் கத்திய தவளைகள் குரல்வளை வெடித்து இறந்து கிடப்பதே மறுநாள் செய்தியாக இருக்கும்.

என்ன செய்வது தவளைகளின் தலைவிதியும் ஊழ்வினையும் அதுவென்றால் யார் தான் என்ன செய்ய முடியும்.

அதோ! தவளைகள் கத்தும் அந்த கடினமான நேரத்திலும் எங்கிருந்தோ வந்த வண்டுகள் தாமரைப்பூவின் தேனைப் பருகிக் கொள்கின்றன.

ஓ! இதுதான் உலக நியதி என்றாயிற்றோ யார் அறிவர்.

ஆம், அழிகின்ற காலத்தில் அறமுரைக்க வல்லவர்களும் அதர்மத்தை அறமாக்கி வேதம் ஓதுவர்.

அறிவாற்றல் மிக்கவர்கள் கௌரவர் சேனைக்கு ஆதரவளிப்பர். சொல்லாட்சிமிக்கவர்கள் நல்லதைத் தீயதென்று வாதம் புரிவர். பக்கம் சார்ந்து தீர்ப்பளிப்பர். இது நடக்கும் நடக்கிறது.

உண்மை. தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகி தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி எழுக தமிழ் என்ற மாபெரும் பேரெழுச்சியை நடத்தி தமிழ் மக்களிடையே ஓர் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தியபோது, பேரவையை விமர்சித்துப் பக்கம் பக்கமாக எழுதியவர்கள் உளர்.

ஒற்றுமை அவசியம் என்றுணர்ந்து பேரவை மலர்ந்தபோது, அதனைக் கருவறுக்க கடும் பிரயத்தனம் செய்தவர்கள் உளர்.

இத்தகையவர்களின் நோக்கமெல்லாம் என்ன? என்பதை அறத்தின் பாற்பட்டு சிந்திக்கின்ற எங்கள் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

ஆனாலும் அவர்கள்தான் என்ன செய்ய முடியும்.

இராமனைப் பழிதீர்க்க வேண்டுமென்று நினைத்துவிட்டால், பட்டாபிஷேகம் வரை காத்திருக்கும் மனநிலையை நம் கம்பராமாயணம் கற்றுத் தந்திருக்கின்றதல்லவா?

கம்பனின் நோக்கமெல்லாம் தன் படைப்பு அறத்தை – அவதாரத்தின் திறத்தை உலகு வாழ் மக்களுக்குப் போதிக்குமென்று.

ஆனாலும் கம்பனின் சிந்தனை கலியுகத்திடை மாற்றமுற்று கைகேயியும் அவர் தோழி மந்தரையும் இராஜதந்திரப் பெண்கள் என்றுரைப்போர்; தமிழ் மக்கள் பேரவை உதித்த போதும் ஏசினர்.

கோவிட் – 19 காலத்தில் ஏற்பட்ட முடக்கத்தின் போதும் பேரவை எங்கே? என்று ஏசுகிறார்கள்.

ஐயனே! வாழ்ந்தாலும் பேசும் தாழ்ந்தாலும் பேசும் வையகம் இதுதானடா... என்று சமரசம் உரைத்த கவியரசு கண்ணதாசன்தான் இப்போதைக்கு எமக்கு ஆறுதல்.

# பல்கலைக்கழக சட்டமூலம் தொடர்பான அரசின் முயற்சி தோற்கடிக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

(கொழும்பு)

அரசாங்கம் தன்னிச்சையாக பல்கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துமானால், அல்லது முன்மொழியப்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகச் சட்டத்தை நிறைவேற்ற முற்பட்டால், அறிவார்ந்த மகா சங்கம், பல்கலைக்கழக சமூகம், பொது சமூக அமைப்புகள், பிற அரசியல் கட்சிகள் மற்றும் இந்த நாட்டின் ஒட்டு மொத்த மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தின் முயற்சியைத் தோற்கடிக்கப் போவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலம் தொடர்பாக ஜனாதிபதி ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பிலேயே எதிர்க்கட்சி தலைவரின் அறிக்கை அமைந்துள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு அறிவியல் பீடம் 1981 ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு அமைச்சின்கீழ் கோட்ட அதிகாரிகளுக்கான பயிற்சி மையமாகவும், இலங்கையில் உயர் கல்வி கற்கும் நிறுவனமாகவும் செயற்பட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை தற்போதுள்ள விதத்தில் பராமரிப்பதற்கும், இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு இன்னும் நவீன மற்றும் விஞ்ஞான பயிற்சிகளை வழங்குவதற்கும் தேவையான அந்த முடிவுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்றுள்ளது.

(ஞா)

# விவசாயிகளுக்கு தேவையான உரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை

## விவசாய அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாவட்டங்களுக்குத் தேவையான உரத்தை விநியோகிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக திணைக்கள ஆணையாளர் ரசித்த ஹேமஜித் சில்வா தெரிவித்தார்.

குறித்த உரத்தொகையானது, கமநல சேவை மத்திய நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. அதே நேரம், மலர் செய்கைக்கு இரசாயன உரம் மற்றும் இரசாயன திரவியங்கள் அவசியமாயின், விவசாய அமைச்சின் நேரடி கண்காணிப்பின்கீழ் அவற்றை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உரிய தேவைக்குரிய விவசாயிகளுக்கு மாத்திரம் இறக்குமதி செய்யப்படும் உரம் வழங்கப்படும். இந்த விடயம் தொடர்பில் விவசாயத் திணைக்களம் தொடர்ந்தும் ஆய்வுகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு வருகின்றது.

இறக்குமதி செய்யக்கூடிய இரசாயன திரவியங்கள் தொடர்பில், விரைவில் வர்த்தமானியின் ஊடாக அறிவிக்கப்படும் என விவசாய அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் ரசித்த ஹேமஜித் சில்வா தெரிவித்தார்.

(ஞா)

### இலங்கைக்கு மேலும்

# 5.6 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள்

(கொழும்பு)


அடுத்த மூன்று வாரங்களில் மேலும் 5.6 மில்லியன் டோஸ் சினோபார்ம் கோவிட்-19 தடுப்பூசி இலங்கைக்கு வழங்கப்படும் என்று இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனூடாக தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை மேலும் துரிதப்படுத்த முடியும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

(ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கர்ப்ப காலப் பொறுப்புகள்



குடும்ப வாழ்வில் பொறுப்பேற்றுள்ள கணவன்-மனைவி இருவரும் கருப்பையில் வளர்ந்து வரும் குழந்தையின் உறுப்புகளின் வளர்ச்சியை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் காலகட்டத்தில், தம்பதிகள் போதைப் பொருள் உபயோகித்து உடலுறவு கொண்டாலும், முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் உருவாகிவரும் குழந்தையின் உறுப்புகள் அதன் விளைவாகத் தாக்கப் பெறும். செயல் விளைவு நீதி அடிப்படையில் பெற்றோர்களின் அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் இவற்றால் கருவில் வளரும் குழந்தையின் உறுப்புகள் நலிவுறும்.


மேலும் கர்ப்ப காலத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு மனதில் துன்பமோ, அச்சமோ அளிக்கும்படி எவரும் நடந்து கொள்ளக் கூடாது. குழந்தை உருவாகும் போதே தாய்-தந்தை இருவரின் கருமையப் பதிவுகள் குழந்தைக்குச் சொந்தமாகிவிடும். அதோடு, கருப்பையில் குழந்தை வளரும் காலத்திலும், பிறந்தபின் அதனை வளர்க்கும் முறையில், ஏற்படும் விளைவுகளும் குழந்தையின் உடல் நலத்தையும், மனவளத்தையும் தக்கபடி அமைத்துக் கொடுக்கும்.

நல்ல குழந்தை பிறக்க வேண்டும் என்று கணவனும், மனைவியும் விரும்புவது இயல்பு. அதற்கேற்றவாறு அவர்கள் கடமையை ஆற்றாவிட்டால், எவ்வாறு நல்ல குழந்தையை அடைவது? ஒரு குழந்தையின் உடல் நலமும், மனவளமும் பெற்றோர்களுக்கு மட்டும் உரிமையானவையல்ல. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், மனித சமுதாயத்தில் ஓர் உறுப்பினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2021-16.08.2021



பிறரின் நிறை குறைகளை உடனுக்குடன் சுட்டிக் காட்டும் தனுசு இராசி வாசகர்களே

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் வக்கிரம் பெற்று 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. இராசிநாதன் வலிமை இழக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டாலும், சில நல்ல காரியங்களும் குடும்பத்தில் நடைபெறும்.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சனிபகவான் வக்கிரம் பெற்றிருக்கின்றார். ஏழரைச் சனியில் இப்பொழுது உங்களுக்கு பாதச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. சனி பகவானுக்கு பகைக் கிரகமாக விளங்கும் சூரியனும், செவ்வாயும் சனியைப் பார்க்கிறார்கள். எனவே மனதில் இனம்புரியாத கவலை மேலோங்கும். சில நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். உடன்பிறப்புகள் மூலம் ஒரு சில நல்ல காரியங்கள் நடைபெறும். குடும்பத்தில் இதுவரை குழப்பத்தை உருவாக்கியவர்கள் இப்பொழுது விலகுவர்.

உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. வாங்கிய பூமியை விற்பதில் தடைகளும், பிரச்சினைகளும் உருவாகலாம். பெண் வழிப் பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். சொத்துக்களில் வில்லங்கங்கள் இருந்து மனக்கவலையைக் கொடுக்கும்.

### சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு

## சில நல்ல காரியங்களும் குடும்பத்தில் நடைபெறும்

சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்பும், பதவிகளும் கிடைக்கும். ஓகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகின்றார். இக் காலம் ஒரு இனிய காலமாகும். உங்கள் இராசிநாதன் குரு பகவானுக்கு, சுக்கிரன் பகைக் கிரகம் என்பதால் அவர் நீச்சம் பெறும் பொழுது உங்கள் எண்ணங்கள் ஈடேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.




### கடக புதன் சஞ்சாரம்

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கின்றார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், 'விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு சுய தொழில் செய்யலாமா?' என்று சிந்திப்பர்.

### சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 21 ஆம் திகதி, சிம்ம இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இதன் விளைவாக விடாப்பிடியாக செயற்பட்டு விட்டுப்போன சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். அரசு வழியில் அனுகூலங்கள் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் பழக்கத்தால் நீங்கள் செய்த முயற்சிகளில் இருந்த இடையூறுகளை அகற்றிக் கொள்வீர்கள். பிறருக்கு வாங்கிக் கொடுத்த தொகை பிரச்சினையின்றி வந்து சேரும். இம்மாதம் ஏகாதசி விரதமிருந்து விஷ்ணுவை வழிபட்டால் எதிர்காலம் இனிமையாக அமையும்.

### பெண்களுக்கான பலன்கள்

குடும்ப ஸ்தானத்தில் உள்ள சனி பகவானை, செவ்வாய், சூரியன், சுக்கிரன் பார்ப்பதால் குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கலாம். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கணவன் - மனைவிக்குள் விவாதங்கள் வந்து கொண்டேயிருக்கும். பிள்ளைகளின் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சமுதாயத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்க விரும்பும் மகர இராசி வாசகர்களே

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி, உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரை அஷ்டமாதிபதியான சூரியனும், பகைக் கிரகமான செவ்வாயும் பார்க்கிறார்கள். எனவே இம்மாதம் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. நிதானத்தோடு செயற்படுவதன் மூலமே நிம்மதியைக் காண இயலும்.

## நிதானத்தோடு செயற்படுவதன் மூலம் நிம்மதியைக் காண இயலும்

ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி இருக்கின்றது. சனி வக்கிரம் பெற்றிருப்பதால் மனச்சோர்வும், உடற்சோர்வும் ஏற்படும். நன்மை செய்தாலும் மற்றவர்களுக்கு அது தீமையாகவே தெரியும். பணப்புழக்கம் திருப்திகரமாக அமையாது.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தன ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அவர் வக்கிரம் பெற்றும் இருக்கின்றார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியாக விளங்கும் குரு, தன ஸ்தானத்தில் வக்கிரம் பெறும் பொழுது, தன வரவு வந்தாலும் அடுத்த நிமிடமே செலவாகிவிடும்.

ஆயினும் தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டிருக்கும். திடீர் திருப்பங்கள் பலவும் ஏற்படும். சகோதர ஸ்தானாதிபதியாகவும் இருப்பதால் பாகப்பிரிவினைகளை சுமூகமாக முடித்துக் கொள்வீர்கள். உங்களை விட்டுப் பிரிந்திருந்த சகோதரர்கள் மீண்டும் வந்து இணையலாம்.

### சிம்ம சுக்கிரனும் கன்னி சுக்கிரனும்

ஜூலை 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஓகஸ்ட் 12 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகிறார். புத்திர ஸ்தானாதிபதியான சுக்கிரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தொழில் பங்குதாரர்களாலும் தொல்லைகள் உண்டு.

### கடக புதன் சஞ்சாரம்

ஜூலை 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான




அவர், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மாமன், மைத்துனர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். வரன்கள் வாசல் தேடி வரும். வருமான பற்றாக்குறை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இதுவரை மறுக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

### சிம்ம செவ்வாய் சஞ்சாரம்

ஜூலை 21 ஆம் திகதி சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் மிகமிக கவனம் தேவை. எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படலாம். இடவிற்பனையின் மூலம் பிரச்சினைகள் உருவாகும்.

உடன் பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள். விரயங்கள் கூடும். வீண் விரோதங்களால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும். 'மருத்துவச் செலவு அதிகரிக்கின்றதே' என்று கவலைப்படுவீர்கள்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து அனுமனை வழிபட்டால் ஆனந்தமான வாழ்வு அமையும்.

### பெண்களுக்கான பலன்கள்

விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். தொழில் வளர்ச்சியில் தளர்ச்சியுண்டு. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தடைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. திருமால், திருமகள் வழிபாடு செல்வ நிலையை உயர்த்தும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1,402...

தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 284, 914 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஞா)

## மீன்பிடிக்கச்...

பெரியநொச்சிக்குளம் குளத்தில் நேற்று முன்தினம் மதியம் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பெரியநொச்சிக்குளம் பகுதியினைச் சேர்ந்த பா.தியாகராசா என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சடலம் அயலவர்களால் மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

## 12 வயதுக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் முறையே 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்படும்.

12 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. தடுப்பூசி நிதியத்துக்கு நிதியளிப் பதில் அரசுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. கோவிட்-19 நோயினால் பாதிக்கப்படக்கூடிய நபர்கள் மற்றும் முன்னணி சுகாதார ஊழியர்களுக்கு சுகாதாரத் துறை முன்னுரிமை அளித்துள்ளது.

வளர்ந்த நாடுகளும் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட இதேபோன்ற நடைமுறையை பின்பற்றுகின்றன.

தடுப்பூசி மூலம் அரசு தனிப்பட்ட இலாபத்தை எதிர்பார்க்கவில்லை என்றார். (ஞா)

## நல்லூரில்...

பொலிஸார் கூறியிருக்கின்றனர்.

திருடப்பட்ட நகைகளில் பெரும்பாலானவை சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

நல்லூர் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள ஆசிரியரின் வீடொன்றில் ஜூலை 4ஆம் திகதி நகைகள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் நாவற்குழியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 7 தங்கப் பவுண் தாலிக்கொடி, நெக்ளஸ், ஒரு தங்கப் பவுண் அளவுடைய 3 சங்கிலிகள், 3 சோடி தோடுகள், ஒரு மூக்குத்தி, 2 மோதிரங்கள், பெறுமதி வாய்ந்த அலைபேசி ஒன்று மற்றும் 2 பவுண் தங்க நகையை விற்பனை செய்த சிட்டை என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஞா-33)

## 46 பேர்...

ளது.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்குட்பட்டவர்களில் 8 ஆண்களும் 5 பெண்களும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 22 ஆண்களும் 11 பெண்களுமாக 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,779 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## கௌதாரிமுனை...

போதே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மீசாலையைச் சேர்ந்த 30 வயதான வைகுந்தராசா பிரதாப் என்ற தபாலக உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார்.

கடலில் மூழ்கியவரை நண்பர்கள் ஆபத்தான நிலையில் மீட்டு பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும்போதே அவர் இடையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஞா-316)

## கோவிட்டால்...

வந்த யாழ்.வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவரே நேற்று உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் நேற்று வரை 113 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-33)

## நாடு மோசமான...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசும் பொதுமக்களும் நிலைமையின் தீவிரத்தை புரிந்து கொள்ளத் தவறினால் நாடு ஆபத்தான சூழ்நிலையை எதிர் கொள்ளும். உலகெங்கிலும் உள்ள போக்கைக் கண்டுகொள்ளும்போது

இலங்கை ஒரு சிறிய நாடு எனப் புறக் கணிக்க முடியாது.

டெல்டா திரிபு ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறினால், முந்தைய கொத்தணிகளைவிட இலங்கை மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ளும்.

இதுபோன்ற பேரழிவைத் தவிர்க்க அரசு மற்றும் பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டெல்டா திரிபு ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறினால், நோய்த்தொற்று விகிதம் கடுமையாக அதிகரிக்கும், அதே நேரத்தில் அதிகமான குழந்தைகளும் பாதிக்கப்படுவார்கள் என்றார். (ஞா)

## டெல்டா திரிபு...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான வைரஸ் தொற்றுக்கள் பரவி வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இலங்கையில் டெல்டா வைரஸ் பரவும் அபாயம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

## நம்பிக்கை...

ளது.

இன்றும் நாளையும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியின் 44 உறுப்பினர்கள் இந்த அவநம்பிக்கை பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர். (ஞா)

## அரசிலிருந்து...

பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னரே அரசில் எமது வகிபாகம் தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

அரசு தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்த ஆறு யோசனைகள் ஏற்கெனவே சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிடம் முன்மொழியப்பட்டுள்ளன. ஜனாதிபதியை நேரில் சந்தித்தன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஆளும் கட்சியிலிருந்து வெளியேறுவது, அரசுடன் இணைந்து ஒன்றாகப் பயணிப்பது, எதிர்வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவது உள்ளிட்ட சில முக்கிய யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன" என்றார். (ஞா)



புறக்கணிக்க முடியாது.

டெல்டா திரிபு ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறினால், முந்தைய கொத்தணிகளைவிட இலங்கை மோசமான சூழ்நிலையை எதிர்கொள்ளும்.

இதுபோன்ற பேரழிவைத் தவிர்க்க அரசு மற்றும் பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினசரி அறிக்கை செய்யப்படும் கோவிட்-19 நோயாளிகளின் இறப்புகள் குறையவில்லை. இருப்பினும் கோவிட்-19 நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கையில் தினசரி வீழ்ச்சி காணப்படுகிறது.

வழங்கப்பட்ட பல சுற்றறிக்கைகள் மற்றும் பி.சி.ஆர் சோதனைகளுக்கு பதிலாக விரைவான அன்டிஜன் சோதனைகளை நடத்துவதே தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிக்கு காரணம்.

இருப்பினும் தினமும் 30-50 நபர்கள் கோவிட்-19 நோயினால் உயிரிழக்கின்றனர்.

டெல்டா திரிபு ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறினால், நோய்த்தொற்று விகிதம் கடுமையாக அதிகரிக்கும், அதே நேரத்தில் அதிகமான குழந்தைகளும் பாதிக்கப்படுவார்கள் என்றார். (ம-3)

## இளைஞன்...

குடத்தனை கிழக்கு பகுதியில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு பத்து மணியளவில் வேலைமுடித்து வீட்டுக்கு வந்த நிலையில் தூங்கச் சென்ற 31வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கதிரிப்பாய் அச்சுவேலியைச் சேர்ந்த அ.கபாஸ்கர் (வயது-31) என்ற இளைஞனே இவ்வாறு மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அச்சுவேலி கதிரிப்பாயிலிருந்து வந்து தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)


தன நிதானய
திகதி - 2021.07.18
சீட்டிழுப்பு இலக்கம் - 539
H 37 52 69 72
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — NLB
சீட்டிழுப்பு திகதி 18.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2804
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 28 48 50 63
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/07/18
சீட்டிழுப்பு இலக்கம் 4509
ஆங்கில எழுத்து T — வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 8 9 2 8 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0857
வெற்றி எழுத்து S — சுப்பர் இலக்க 03 — வெற்றி இலக்கங்கள் 36 39 66 79

அத கோடிபதி — ADA KOTIPATHI
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1312
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 18.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,487,906
வெற்றி இலக்கங்கள் 13 29 32 50 — ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3647
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 18.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 43,735,957
வெற்றி இலக்கங்கள் 25 28 33 56 — ஆங்கில எழுத்து I
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 5,215,059/=
திகதி : 18.07.2021
வெற்றி வாரம் : 3198
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 31 39 50 60 — மகரம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,112,680/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1486 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 18/07/2021 — தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் E 04 32 36 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,199,107/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு றாஜ் - 077 679 6623 (7269)

## தேவை

இயங்காத நிலையில் உள்ள அனைத்து
விதமான Samsung, I Phone, Huawei
தொலைபேசிகளும் கொள்முதல் செய்யப்படும்.

**ARK Mobile Shop**

No. 62, Hospital Road, Jaffna. (C-2378)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-2270)

# தடுப்பூசியின் இரு டோஸ்களையும் பெற்று லண்டனிலிருந்து யாழுக்கு வந்தவர் கொரோனாவினால் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய மருத்துவர் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் அவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த சிற்றம்பலம் இராசலிங்கம் (வயது-80) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் முன்னாள் அச்சுவேலி வைத்தியசாலை அத்தியட்சகர் என்று உறவினர்களினால் தெரிவிக்கப்பட்டது. லண்டனிலிருந்து கடந்த ஜூன் 29ஆம் திகதி அச்சுவேலி திரும்பிய அவர் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அவரது சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகளில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கோவிட்-19 நோய்த்தொற்றுள்ளதாக நேற்று முன்தினம் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதனால் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் முதியவரின் சடலம் சுகாதார நடைமுறைகளின்கீழ் மின் தகனம் செய்யப்பட்டுள்ளது.

அவர் கடந்த மாதம் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் லண்டனில் பைசர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டதற்கான அட்டையை வைத்திருந்துள்ளார். (ஞா-33)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும்
உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர்,
கொத்து றொட்டி போடுதல். பிறைட் றைஸ்
தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
போன்ற பணிகள் செய்யக்கூடிய பணியாளர்கள்
தேவை. தகுதியுடையோர் நேரில்
வருகை தரவும்.

தொடர்புகளுக்கு (C-2380)

077 649 1027
077 940 0963

# சுற்றுலாத்துறையினருக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை சார்ந்தோருக்கு மொடெர்னா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று சிகிரியாவில் ஆரம்பமாகின.

இதன்படி, சிகிரியாவில் உள்ள சுற்றுலாத்துறை சார்ந்த 2ஆயிரம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறை வர்த்தகர்கள், சாரதிகள், வழிகாட்டிகள், பொருள் விநியோகத்தர்கள் மற்றும் இசைக்குழுக்களை சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடம்பெறவுள்ளன. (ஞா)

# யாழில் 3 நாட்களில் கொரோனாவால் நால்வர் மரணம்

யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று நாட்களில் மேலும் நான்கு கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்ட கோவிட்-19 புள்ளிவிபரதரவுகளின் அடிப்படையில் கடந்த 3 நாட்களில் மேலும் நான்கு கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த 8-14 வரையான நாட்களில் எந்தவொரு கோவிட்-19 மரணமும் யாழ். மாவட்டத்தில் பதிவாகியிருக்காத நிலையில் கடந்த 3 நாட்களில் இவ்வாறு மேலும் நான்கு கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட மொத்த கொரோனா உயிரிழப்பு 113 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 31ஆம் நாள் நினைவலைகள்



கடந்த 19.06.2021 அன்று அமரத்துவமடைந்த எமது தாயார்
அமரர்

## திருமதி நாகம்மா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் சமூகவலைத்தளங்கள் வாயிலாகவும் தமது அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவியாக நின்று தோள் கொடுத்தவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் ...

பிரதான வீதி,
முள்ளியவளை மேற்கு.

குடும்பத்தினர்

(C-2370)

**RATNAM BIRIYANI** (7270)
தம் பிரியாணி Chicken Rs 400 Hot & Spicy Egg Rs 300
YUMMY FREE HOME DELIVERY 07577 89 871

## மணமகள் தேவை

1983 யாழ். இந்து கௌரவ
குடும்பத்தைச் சேர்ந்த சூரியன்,
செவ்வாய் பாவக்கிரகம் குறைந்த
மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (7257)
+49 17672490328
+94 772598289

## AGX ஏற்றுமதியாளர்கள்

ஆகாய, கடல் மார்க்கமாக
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

கனடா 650/=
லண்டன் 975/= (C-2373)

இல. 216, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
076 443 1578

## சிறுநீரகம் உடன் தேவை

0+ சிறுநீரகம் உடன் தேவை.
வழங்க விரும்புபவர்கள் உடன்
தொடர்பு கொள்ளவும்.
( சன்மானம் வழ்ங்கப்படும் )
(C-2376)

076 018 3700
077 468 5553

**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2308)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

0768226240 DHL (C-2307)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org